# பொன்விழா மலர்



## சைவ மகா சபை
## மாத்தளை

ஜூலை 31, ஆகஸ்ட் 01 - 2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமும் தமிழும் தழைத்தோங்க காலமெல்லாம் பணிபுரிந்த
சைவ மகா சபையின் பணி தொடர
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

# இரா. தங்கவேல் செட்டியார்

அன்

# சன்ஸ்

## இல:338,
## பிரதான வீதி,
## மாத்தளை.

தொலைபேசி : 066—2222437
தொலைநகல் : 066—2222536

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பொன்விழா மலர்

# 2004

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்
1954
சைவ மகா சபை
மாத்தளை


## சைவ மகா சபை

## மாத்தளை


**ஜூலை 31 சனி, ஆகஸ்ட் 01 ஞாயிறு**
**ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபம்**
**மாத்தளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் விழாக் காணும்
மாத்தளை சைவ மகா சபையினர்க்கு
இதயங்கனிந்த வாழ்த்துக்கள்...!



# JOTHY VIDEO & COMMUNICATION



*Telephone Calls - Local & IDD, Fax,*
*Photocopy,*
*Film Rolls,*
*Batteries,*
*All Kind of Greeting Cards,*
*High Quality Audio Cassettes,*
*Audio CD,*
*Audio Recording,*
*VCD to VHS Recording & Sales*
*Old & New Video Cassettes,*
*DVD, VCD, For Rental.*



**No: 551/F,**
**MAIN STREET,**
**MATALE.**

**Tel : 066-2233394**
**Fax : 066-2233395**
**Mobile: 0777-795151**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வாயில்

மாத்தளை, மண்ணில் ஐம்பது ஆண்டு வரலாற்றைப் படைத்த ஒரே சபை சைவ மகாசபை அதன் வரலாறு பொன் எழுத்துக்களால் பொறிக்க படவேண்டிய ஒன்று. அதனால்தான் சபையினர் பொன்விழா எடுத்து மகிழ்கின்றனர்.

மங்கள இசை எங்கும் பரவி நிற்கிறது. முகப்பில் வாழைகள், மாவிலைத் தோரணங்கள் மகிழ்வில் அசைந்தாடுகின்றன. வாசலில் வண்ணக் கோலங்கள் பூரண கும்பங்கள். மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கல்யாண மண்டபம் இன்று விழாக்கோலத்தில் திழைக்கிறது.

மாத்தளை சைவ மகா சபை தனது பொன் விழா சிறப்பாக கொண்டாடும் நாள். அங்கத்தவர்கள் ஒவ்வொருவரினதும் மனதை நிறைவிக்கும் பொன் விழா! மகிழ்ச்சித் திருவிழா!! மறக்க முடியாத பெருவிழா!!!

நாம் நடந்து வந்த நீண்ட பாதையை நினைத்துப் பார்க்கின்றோம் சபை எதிர் நோக்கிய சோதனைகள் பலப்பல ஆனாலும் நிலைநாட்டிய சாதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி, சமயம், பண்பாடு, கல்வி, இலக்கியம் முதலிய துறைகளின் வளர்ச்சிக்டாக சபை புரிந்த பணிகள் மாத்தளை வாழ் இந்துத்தமிழ் மக்களின் உள்ளத்திலும் உணர்விலும் இரண்டறக் கலந்து விளங்கும் நிலையில், இந்த மக்களின் சொந்த விழாவாக சபையின் பொன்விழா திகழுகின்றது.

இந்து சமயம் என்பது வெறும் கேள்வி ஞானத்தையோ சடங்குகளையோ கொண்டது மட்டுமல்ல. அன்பு, தியாகம், உண்மை, ஒற்றுமை உணர்வு போன்ற உயர் பண்புகளை அடிப்படையாகக் கொண்ட உயர் வாழ்க்கை முறையே ஆகும்.

சமய விழாக்கள், கலை நிகழ்ச்சிகள், சமய வகுப்புக்கள், சமய சொற் பொழிவுகள், மலர் வெளியீடுகள் முதலியன மக்களது சமய அறிவையும் பண்பையும் வளர்க்க உதவும் என்பதில் திடமான நம்பிக்கை. இந்த அடிப்படையிலையே எமது பொன் விழா நடைபெறுகின்றது.

சபையின் சென்ற காலப் பணிகளில் தம்மை இணைத்து அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றிய பெரியோர்களை நன்றியுடன் நினைவு கொள்கின்றோம். சைவ மகா சபையின் வெளியீடாக "சைவக்கதிர்" சஞ்சிகை (1962), சைவக்கதிர் (1964–1965), சைவக்கதிர் (2000), சைவக்கதிர் (2000) நான்கு வெளியீடுகள் வெளிவந்துள்ளன.

இம் மகிழ்ச்சியான வேளையிலே பொன் விழா சிறக்க பொருளுதவி புரிந்த வள்ளல்களைப் போற்றிப் பணிகின்றோம். மலரும் இம் பொன் விழா மலர்க்கு விளம்பரம் தந்துதவியர்கள், இதற்கு மணமும் அழகும் சேர்த்த அருளாளர்கள், அறிஞர்கள், பெரியோர்கள், சபை உறுப்பினர்கள், அலங்கார் அச்சகத்தார் அனைவருக்கும் இதயம் மலர நன்றி கூறி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வணங்கி, மாத்தளையில் தாயாக அமர்ந்து, அருளாச்சி புரிகின்ற அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மனின் திருபாதங்களில் இம்மலரைச் சமர்ப்பித்து வணங்குகின்றோம்.

மாத்தளை கார்த்திகேசு
கு. புண்ணியமூர்த்தி
(மலர் ஆசிரியர்கள்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

# ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
## மாத்தளை



*பொன் விழா*
*சிறப்பாக அமைய*
*எனது வாழ்த்துக்கள்...*

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சமயமான இந்துசமய கோட்பாடுகளுக்கு அமைய சமயத்தினை வளர்க்கும் நோக்குடன் செயற்பட்டு வரும் மாத்தளை சைவ மகா சபையும், சபையின் அங்கத்தவர்களும், ஓர் உன்னதமான செயற்திட்டத்தை மேற்கொண்டு வருவதை பாராட்டியேயாக வேண்டும்.

இந்த சைவ மகா சபையானது பல வருடங்களாக சமய, சமூகப் பணிகளை ஆற்றி இன்று தனது ஐம்பதாவது (50வது) ஆண்டைப் பூர்த்தி செய்து சபையின் பொன் விழாவைக் கொண்டாடுகிறது. என்றால் நூற்றாண்டின் அரைப்பகுதியான, அரை நூற்றாண்டை நிறைவு செய்திருப்பது இச்சபைக்கு ஒரு தனிப் பெருமையாகும்.

இச்சபையினை கண்ணும் கருத்துமாக கட்டிக்காத்துவரும் சபையினரது கடமையுணர்ச்சியையும், பொறுப்பையும் பாராட்டியேயாக வேண்டும். சைவப்பணிக்கு தொண்டாற்றிட மெய்யன்பர்கள் அனைவருக்கும் திருவருளும், குருவருளும் கிட்டவும், 50வது ஆண்டு நிறைவினையொட்டி நடைபெறவிருக்கும் 'பொன் விழா' மிகச் சிறப்பாகவும், விமரிசையாகவும், நடைபெற எனது நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், வெளிவரும் இம்மலர் எம்மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, கலாசார விழுமியங்களையும் கட்டிக்காக்க வேண்டி மனதார வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்
அம்பாள் சேவையில்
**த.மாரிமுத்து செட்டியார்**
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் விழாவைக் கொண்டாடும் மாத்தளை சைவ மகா சபை
இன்னும் பல தசாப்த காலங்கள்
தமிழுக்கும் சைவத்துக்கும் சேவை செய்ய வாழ்த்துகின்றோம்...

# MANAMAGAL FANCY

**Dealers in Fancy & Cavering Jewellery**

**NO: 614 B, MAIN STREET,
MATALE.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வாழ்த்துச் செய்தி

இன்று சைவ மகாசபை தனது பொன் விழாவைக் கொண்டாடுகின்றது. சபையின் தலைவர் என்றவகையில் எமக்கு இது ஒரு பெரும் பூரிப்பை தருகின்றது.

ஐம்பது ஆண்டுகள் ஒரு சேவை அமைப்பு மலையகத்தில் தொடர்ந்தும் செயல்பட்டு கொண்டு, எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து, இன்றுவரை மாத்தளை வாழ் தமிழ்பேசும் மக்களுக்காக முக்கியமாக பெருந்தோட்டப்பிரதேச மக்களுக்காக பல சேவைகளைச்செய்து கொண்டு இருப்பதையிட்டு நாம் அனைவரும் பெருமைப்படுகின்றோம்.

இச்சபை சமயப்பணிகளில் ஆரம்பித்து இன்று சமூகப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்துவருவது காலத்தின் தேவை. 1994ல் சபையை மறுசீரமைத்த நமது அன்றைய சகோதரர்கள் அதன் பாதையை சமூகத்தை நோக்கித்திருப்பிவிட்டது சமூகத்துக்கு கிடைத்த ஒரு பெரும்பேறு. அன்றிலிருந்து எமது பணிகள் ஒவ்வொன்றும் சமூகத்தின் நன்மைகருதியே செயற்படுத்தப்பட்டன. முக்கியமாக அதன் கல்விப் பணிகளையும் வைத்திய உதவிகளையும் எடுத்துக்காட்டாக கூறலாம். அதன்பலன்கள் சமூகத்துக்கு முக்கியமாக இளைய சமுதாயத்தினருக்கு கிடைக்கும்போது நாம் பெருமைப்பட்டோம். இப்பணிகள் தொடர எல்லாம் வல்ல அம்பாள் துணை நிற்க வேண்டுகின்றேன்.

பெற்றோர்களை இழந்த, பெற்றோர்களால் கைவிடப்பட்ட, பெற்றோர்களால் வறுமை காரணமாக வளர்க்க இயலாமல் தங்களுடைய வாழ்வை பாழாக்கிக்கொள்ளும் பிள்ளைகளுக்கு மாத்தளை வாழ் நாம் இதுவரை என்ன செய்திருக்கின்றோம். பிச்சை எடுக்கும்போது சில்லறைகளை போடுவதுடன் எமது பொறுப்பு முடிந்து விட்டதா? வேலைக்கு அமர்த்தி அவர்களது வாழ்வை பாழாக்குவதில் நாம் திருப்தியடைகின்றோமா? அல்லது அவர்களுக்கு வழிகாட்டி நல்ல பிரஜைகளாக இச்சமூகத்துக்கு வழங்க முன்வருவோமா? சைவ மகா சபை இப்படியான பிள்ளைகளுக்கு ஒரு விடுதி அமைத்து அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க திட்டமிட்டுள்ளது. இதுவே எமது இன்றைய பெரிய திட்டம். இதற்கு இதனை வாசிக்கும் அனைவரதும் ஒத்துழைப்பு இருக்குமென்ற நம்பிக்கையிலேயே இதனையும் இங்கு குறிப்பிடத்துணிந்தேன்.

இச்சந்தர்ப்பத்தில் இச்சபையை ஆரம்பித்து வைத்த ஆரம்பகர்த்தாக்களையும் அவர்கள் ஆரம்பித்த நற்பணிகளையும் எம்வரை கொண்டுவந்த எமது மூத்த சகோதரர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நாங்கள் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். அவர்களால்தான் இன்று எமது சமூகம் பல பயன்களை பெற்றுக்கொண்டிருக்கினறது. அவர்கள் தொடங்கிய பணியினை காலத்துக்கேற்ற வகையில் மாற்றங்களைச் செய்து மக்களுக்கு பயன் பெறும் வகையில் எங்களால் இயன்ற சேவைகளை தொடர்ந்தும் செய்து வருகின்றோம். இப்பணிகள் தொடர வேண்டும். சமூகத்தின் தேவைக்கு ஏற்றவாறு அவை மாற்றம் பெறவேண்டும், மக்கள் பயன் பெறவேண்டும், அதனை செய்ய வேண்டிய பொறுப்பினை எம்மை தொடர்ந்து வரும் அடுத்த பரம்பரைக்கு நாங்கள் வழங்குகின்றோம்.

**வளரட்டும் எமது சபை.**
**தொடரட்டும் சபையின் பணிகள்.**
**பெறட்டும் மக்கள் அதன் பயன்களை.**

**பொய்யார் செல்வரத்தினம்**
தலைவர் சைவ மகா சபை மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாத்தளை வாழ் தமிழ் மக்களிடம் நீங்கா இடம் பெற்ற
சைவ மகா சபை பல்லாண்டு நீடூழி வாழ்க...!

# YOGA MEDICALS

## PHARMACY

## &

## GROCERIES



**NO: 612,**
**MAIN STREET,**
**MATALE.**



**Tel: 0788-741410**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மயுராபதி ஸ்ரீ பத்ரகாளியம்மன் தேவஸ்தானம்,
மயுரா பிளேஸ், கொழும்பு–06.

## வாழ்த்துச் செய்தி

இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்தின் மத்தியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நகர் மாத்தளை. இப் புண்ணிய பூமியை அன்னை முத்துமாரி அருளாலாச்சி புரிகிறாள்.

இன் நகரில் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சமயப்பற்றும், தமிழ்ப்பற்றும், சமூதாயப் பணியும் தீர்க்க தரிசனமும் கொண்ட பெருமக்களால், சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டுமென்ற நன்நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட சைவ மகா சபை, மொழி, சமயம், கல்வி, கலாசாரம் ஆகிய பல் துறைகளிலும் பல சீரியபணிகளைத் திறம்பட நடாத்தி வந்துள்ளது யாவரும் அறிந்ததே. இப்பொழுது அதன் பொன் விழாவை சிறப்பாக் கொண்டாட இருப்பது கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பல இன, மத, மக்கள் வாழும் இப்பிரதேசத்தில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக தெய்வீகப் பணியை தொடர்ந்து நடத்தி வரும் சைவ மகா சபை, சைவத்தையும், தமிழையும் பேணிப் பாதுகாத்து எதிர்காலத்தில் இளைஞர் சமூதாயத்திற்கு உதவும் வகையில் தொடர்ந்து அரும்பெரும் சேவை செய்ய வேண்டுமென்றும் பல்வேறு சமயத்தவர்களும் பல மொழிகளைப் பேசுபவர்களும் அம்பாளை தர்சித்து ஆசீர்வாதம் பெறுவதை கண்டிருக்கிறேன். ஆகையால் முக்கியமான சில பாடல்களையும், மந்திரங்களையும் சிங்களப் பாஷையிலும் அச்சிட்டு இலவசமாக வினியோகித்தல் மிகவும் மெச்சுதற்குரிய விஷயமாகும் என்று கூறி, மாத்தளை சைவ மகா சபையினரது அரும் பெரும் சேவை என்றும் நிலைத்திருக்க எல்லாம் வல்ல மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மனின் அருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**பொன். வல்லிபுரம் ஜே.பி.**
அறங்காவலர்
ஸ்ரீ பத்ரகாளியம்மன் தேவஸ்தானம்,
மயுரா பிளேஸ், கொழும்பு-06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமும் தமிழும் தழைத்தோங்க காலமெல்லாம் பணியுரிந்த
சைவ மகா சபையின் பணி தொடர
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்...!

# SHAKTHI TRADE CENTRE

**WHOLESALE**
**&**
**RETAIL DEALERS IN,**
**FANCY GOODS, COSMETICS,**
**BABY ITEMS, GLASS ITEMS, GIFT ITEMS,**
**ALUMINIUM AND**
**PLASTIC ITEMS, SCHOOL STATIONERIES,**
**WALL CLOCK, GROCERIES ETC,**





**NO: 614,**
**MAIN STREET,**
**MATALE.**

**Telephone: 0788-741705.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
சக்தி

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

## மாத்தளை, களுதாவளை
## சுதுகங்கை
# ஸ்ரீ ஏழுமுக காளியம்மன் கோயில்

# வாழ்த்துச் செய்தி

மாத்தளை சைவ மகா சபையின் ஐம்பதாவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு பொன் விழா நிகழ்ச்சிகள் 2004ம் ஆண்டு யூலை 31ம் திகதியும் ஆகஸ்ட் 1ம் திகதியும் கொண்டாடுவதை முன்னிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். விழாவை முன்னிட்டு ஒரு சிறப்பு நினைவு மலர் வெளியிடுவதும் ஆன்றோரும் சான்றோரும் அந்நினைவு மலரில் கருத்துக்களை கட்டுரை வடிவில் வழங்கியிருப்பதும் நமது தற்கால சந்ததியினருக்கும் வருங்கால தலைமுறையினருக்கும் பெரிதும் பயன் நல்கும் முயற்சியாகும்.

மாத்தளை சைவ மகாசபை, சைவத்தையும் தமிழையும் பேணிப்பாதுகாத்து எதிர்கால இளைஞர் சமுதாயத்துக்கு உதவும் வகையில் தொடர்ந்து அரும் பெரும் சேவை செய்ய வேண்டும் என்று எல்லாம் வல்ல ஸ்ரீ ஏழுமுக காளியம்மன் அருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**ச. சந்திரசேகரம்**
தலைவர்
சுதுகங்கை ஸ்ரீ ஏழுமுக காளியம்மன் கோயில்
களுதாவளை, மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை சைவ மகா சபை 2004ல் பொன் விழாவைக்
கொண்டாடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்...

# SRI KARTHIK MERCHANTS

**IMPORTERS, EXPORTERS GENERAL RICE MERCHANTS
COMMISSION AGENTS FOR ALL SRI LANKAN
QUALITY AGRO PRODUCTS.**

**K. KARTHIGESU (KARTHIK)
(PROPRIETOR)**

**JUSTICE OF THE PEACE
(ALL ISLAND)**

**#. 83, 85, 5th CROSS STREET,
COLOMBO - 11.**

**Tel: 2423888, 074- 724465, Direct: 2432733
Fax:+94-11 2338568, Mobile: 077-7860041
E-mail: srikarthik 83 85 @ yahooco.m**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

'மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்'



இரத்தோட்டை, ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய
பரிபாலன சபையின்

# வாழ்த்துச் செய்தி

உலக மதங்களிலே மிகவும் தொன்மையானது எமது மதமான இந்து மதமேயாகும். மக்கள் மத்தியிலே மதரீதியான கருத்துக்களும், நிகழ்வுகளும் நிலவி நிலைபெறும் போது சமூக ரீதியான மாற்றங்கள் எல்லோராலும் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆகவே எமது மத அமைப்புகளும் சமூக அமைப்புகளும் மேற்படி நிலையை அடைய எமது இந்து மக்கள் அவ்வமைப்புகளுக்கு பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

அந்த வகையிலே 2004ல் 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் மாத்தளை சைவமகா சபையின் கடந்த கால வரலாற்று நிகழ்வினை உற்று நோக்கும் பொழுது தனது 50 ஆண்டு கால மக்கள் சேவையில் பல சோதனைகளைக் கடந்து சாதனை படைத்து வரும் ஒரு சைவ அமைப்பாகும். அவ்வகையிலே இவ்வமைப்பினைச் சார்ந்த அனைவருக்கும் நன்றியையும், மகிழ்வினையும் தெரிவிக்கவேண்டியது இந்து மக்களின் கடமையாகும்.

இவ்வமைப்பு கடந்த காலங்களில் ஆற்றிய சேவைகளைப் போன்று எதிர்காலங்களிலும் திட்டமிட்டிருக்கின்ற சேவைகள் அனைத்தும் பரிபூரணமாக நிறைவேற்ற எல்லாம் வல்ல இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானும், ஏழுமுக காளியம்பிகையும், மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்பிகையும் பூரண அனுக்கிரகம் புரிய வேண்டுமென்று பிரார்த்திப்பதோடு, மாத்தளை சைவமகா சபையின் உதவிகள், வழிககாட்டல்கள் மூலம் சமூக பொருளாதார மாற்றத்தினை எமது சமூகத்தில் ஏற்படுத்தி மற்றை சமூகங்களுக்கு நிகரான சமூகமாக எமது சமூகம் வளர்ச்சியுற வேண்டுமென ஆவலோடு எதிர்பார்க்கின்றேன்.

கா. கருப்பையா
தலைவர்,
ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்,
இரத்தோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பணி தொடர
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்...

# RANI GRINDING MILLS

For Pure 100%
Chille Powder,
Curry Powder,
Curry Stuff,
Safron Powder Etc.

**NO:219, MAIN STREET, MATALE.**

**Tel: 066 - 2222425**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்திமயம்



# ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தானம்
# கொழும்பு

## வாழ்த்துச் செய்தி

1954 ஆம் ஆண்டில் எமது மக்கள் மத்தியில் ஆன்மீக அறிவை விருத்தி செய்யும் நோக்கத்தோடு, மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அனுசரனையுடன் ஆரம்பித்து பணிகளை சிறப்புற செய்து வருகின்ற மாத்தளை சைவ மகா சபை தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி 'பொன் விழா' வைக் கொண்டடுவதையிட்டு மட்டற்ற பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இச்சபையானது சமய அறிவை பெருக்க தமிழ் நாட்டைச் சேர்ந்த சமயப் பெரியார்களை அழைத்து சமய சொற் பொழிவுகளையும் வறிய நிலையிலுள்ள மாணவர்களின் சமூகநலன் கருதி பல தரப்பட்ட சேவைகளை பல சிரமங்கள் மத்தியிலும் செயற்படுத்தி வருகிறது. சமய, சமூக, கல்வி, கலாசார, பொருளாதார பிரச்சனைகளால் பின் தங்கிய நிலையிலுள்ள மக்களை மற்றைய சமூகங்களுக்கு நிகரான சமூகமாக எதிர்காலத்தில் கட்டியெழுப்புவதை நோக்கமாக கொண்ட இவ் சைவ மகா சபையின் சேவையானது பாராட்டபட வேண்டிய விடயமாகும்.

எனவே இச் சபையின் சமூக பணிகள் மேலும் விருத்தியடைந்து எம் மக்கள் பல நன்மைகளைப் பெற எனது ஒத்துழைப்பும் நல்லாசியும் எப்போதும் கிடைக்கும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

லயன் கே. கேசவராஜா **MJF. JP**
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் சைவத்திற்கும், தமிழுக்கும் பணியாற்றி வரும் மாத்தளை சைவ மகா சபை வாழ்க! வளர்க...!


# JANATHA STEELS


**Importers & General Hardware Merchants**

* M.S CHANNEL
* M.S SHEETS AND PLATE
* M.S CHEQUERED PLATE
* M.S. COIL
* PVC SHEETS
* ROUND TUBE
* ROOFING FELT
* SQUARE IRON
* STEAM PIPE - LIGHT -MEDIUM -HEAVY
* SEAMLESS STEEL PIPE, SCH 40 AND SCH 80
* STAINLESS STEEL SHEETS
* STAINLESS STEEL TUBE
* SQUARE IRON
* SLOTTED ANGLES
* TEE IRON
* TOR STEEL
* WELDED MESH
* WELDING ELECTRODES
* ZINC COATED STEEL SHEETS
* ANGLE IRON-EQUAL AND UNEQUAL
* ALUMINIUM COILS & SHEETS
* ALUMINIUM CHEQUERED-PLATES
* B.I SHEETS
* B.S. SHAFTING
* BLACK STEEL PIPE LIGHT -MEDIUM -HEAVY
* CARBIDE CHINA / S.A
* FLAT IRON
* G. I. PIPE- LIGHT- MEDIUM- HEAVY
* GATE CHANNEL
* G. I. WIRE
* G.I. PLAIN AND ROOFING SHEET
* H. IRON
* HOOP IRON
* HARDBOARD
* JUMPER STEEL
* LIP CHANNEL
* SHOWELS, MAMMOTIES & AGRICULTURAL IMPLEMENTS

**Specialists In GI, PIPES, ANGLES, B. I. SHEETS, CHANNELS & H BEAMS MS PLATE S S SHEETS**

**HOTLINE: 2421412**

SUPPLIES: 2543436, 534 7341
**IMPORTS: 2454282, 2544288**
FAX: 2345667, 254 3436
E-Mail: janathas@eureka.lk
Website: www.janathasteels.com
20, Quarry Road, Colombo 12.
(Opposite HNB)
**SALES: 232 1431, 233 8607, 232 5807, 238 5180**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹில்வூட் அபிவிருத்திச் சங்கம்
### றொஸ்ஸல்ல.



# வாழ்த்துச் செய்தி

'மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்'

மாத்தளை மாநகரில் வீற்றிருந்து அனைவரையும் ஆட்கொண்டருளும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மனின் அருளால் இன்று மாத்தளை சைவ மகா சபை தன் ஐம்பதாண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

இன்றைக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன் இந்து இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட இச்சைவ மகா சபை, சைவமும் தமிழும் சமூகத்தில் தழைத்து ஓங்கி வளர சிறப்பான பங்களிப்பை வழங்கி வந்தது. அவர்களது இடைவிடா முயற்சியினால் ஆண்டு தோறும் அறநெறி வகுப்புகளும், பரீட்சைகளும், இறை தொண்டுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு எவ்வித இடையூறும் இன்றி சபை அங்கத்தவர்களதும் பக்த அடியார்களதும் ஒத்துழைப்பால் மிகவும் சிறப்பாக வழிநடத்தப்பட்டு வந்து தற்போது அதன் ஐம்பதாண்டு நிறைவைக் கொண்டாடும் தருணத்தை எதிர்கொள்கிறது.

ஆயினும் இன்றுவரை ஓர் குறை இருந்த வண்ணமே உள்ளது. இதுவரையும் சைவ மகா சபைக்கென ஓர் தனிக்கட்டிடம் இல்லாமை வருந்தக்கூடிய விடயமாக உள்ளது. இக்குறையை, குறித்த முக்கியஸ்தர்களின் கவனத்திற்கு கொண்டுவந்து அதற்கொரு தீர்வும் இவ்வைம்பதாண்டு நிறைவில் கிட்டும் என எதிர்பார்க்கின்றேன்.

இன்று ஐம்பதாண்டு நிறைவு விழாவை கொண்டாடும் சைவ மகா சபையின் நல்ல முயற்சிகளும் சேவைகளும் மென்மேலும் பெருக வேண்டும். அதேபோல் அவர்களது மலர் எமது சமயத்தின் சிறப்புக்களனைத்தையும் புலப்படுத்துவதாய் அமைந்து சிறப்புற விளங்கி என்றென்றும் சைவ மகா சபை, தேவி ஸ்ரீ முத்துமாரியம்மனின் அருட்கடாட்சத்தைப் பெற்று சிறப்புடன் தம் பணியை தொடர வாழ்த்துகின்றேன்.

எம். ஆர். ராஜா
தலைவர்

ஹில்வூட் அபிவிருத்திச் சங்கம்,
றொஸ்ஸல்ல, ஹட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமும் தமிழும் தழைத்தோங்க காலமெல்லாம் பணிபுரியும்
சைவ மகா சபையின் பணி தொடர
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்...!

# T.R.
# MARKETING SERVICES

## DISTRIBUTORS FOR
## DELMAGE DISTRIBUTORS
## (PVT) LTD.

## NO: 16/3, PARK STREET,
## DEHIWELA.

## TEL: 078 - 697331

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'



# வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் செழித்தோங்க இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மாத்தளைச் சிவனேயச் செம்மல்கள் ஒன்று கூடி சைவ மகா சபை என்னும் ஒரு ஸ்தாபனத்தை அமைத்தனர். அறம் படைத்த அவ்வருளாளர்கள் எங்கள் "கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் பெருநோக்கோடு தமிழ் வாழச் சைவம் வளர ஆக்க வேலைகளை ஊக்கத்துடன் செய்து வந்துள்ளனர். அன்னாரது அயரா உழைப்பின் பயனாக மாத்தளை சைவ மகா சபை தொண்டில் ஈடுபட்டு நாளும் வளர்ச்சியடைவதாயிற்று இன்றைக்கு இச் சபையினர் பொன் விழாவை கொண்டாடுவது கண்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

மனிதனாகப் பிறத்தல் அரிதினும் அரிது, இப்பிறவி தப்பினால் எப் பிறவி கிடைக்குமோ அறியேம். ஆதலின் உயிரும் உடம்பும் உள்ள இப்போதே செய்ய வேண்டிய நல்ல காரியங்களை எமக்காகவேனும் பிறருக்காகவேனும் செய்து முடித்தல் வேண்டும். நாம் ஒவ்வொருவரும் கழித்த நாட்களை நினைத்து பார்ப்போமாயின் எத்தனை நல்லவற்றையும் எத்தனை தீயவற்றையும் செய்துள்ளோம் என்பது நன்கு விளங்கும். அப்போது நம்மை நாமே நோக வேண்டியவர்களாவோம். ஊழ்வினை பயன்களையும் நாம் செய்யும் புதுவினைப்பயன்களால் நீக்க முடியும்.

இத்தனைக்கும் சமய வளர்ச்சியே இன்றியமையாதன வாகும். எச்சமயத்தைச் சேர்ந்த எப்பெரியாரை நாம் பார்ப்பினும் இறை வழிபாட்டையே காண்பிக்கின்றனர். அன்னோர் காட்டிய வழியைப் பின்பற்றினால் எமக்கு எவ்வித துன்பமும் எக்காலமும் வரமாட்டாது. சைவசமயத் தொண்டையும், இறை வழிபாட்டையும் நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்வோமாக.

மாத்தளை சைவ மகா சபையினர் இன்னும் இது போன்ற பல விழாக்களை காணவேண்டும் என்று எல்லாம் வல்ல அம்பிகையை வேண்டி வாழ்த்துகின்றோம்.

இரா. புவனேந்திரன்
கொழும்பு.

சோமசுந்தரம் புஸ்பராஜா
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாத்தளை வாழ் தமிழ் மக்களிடம் நீங்கா இடம் பெற்ற*
*சைவ மகா சபை பல்லாண்டு நீடூழி வாழ்க...!*


# COLONIAL HARDWARE STORES

**IMPORTERS, DISTRIBUTORS & GENERAL HARDWARE MERCHANTS**

427, OLD MOOR STREET, COLOMBO-12, SRI LANKA / TEL: 011-2-431950, 011-2-435414, 011-2-34798

TEL: 011-2-387827, 011-2-381792, 011-2-391193

FAX: 011-2321144, 011-2334090 / E-mail: colonial@slt.lk // Web: www.colonial.lk

- M.S.H Iron
- Angle Iron
- Round Iron
- Flat Iron
- Square Iron
- Tor Steel
- M.S. Channel Iron
- M.S. Sheet
- G.I. Sheet
- Aluminium Sheet
- M.S. Plate
- M.S. Chequred Plate
- Lip Channel
- Stainless Steel Fittings and Pipes
- Flanges - PN 16, PN10, Class 150.300
- Cuttung Wheel and Grinding Wheel
- Ball Cock Valves
- Globe Valves
- Gate Valves
- Flexible Jioint and Rubber Bellows
- Chains - M.S. and S/S
- Insulation Glass Wool
- Gasket Packing
- Boiler Feed Pumps

**Colonial Group Of Companies**

**COLONIAL ELECTRICAL EQUIPMENT**

545/B, Sri Sangarajah Mawatha, Colombo-10.
Tel: 011-2384594 011-2384595 / Fax: 011-2384593

**Branches**

138, Sri Sumanatissa Mawatha, Colombo-12. Tel: 011-233 4197, 011-247 2639, 011-471 0201 / Fax: 011-491 0200
461, Old Moor Street, Colombo-12. Tel: 011-233 8010, 011-233 8011 / Fax. 011-233 8010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# எங்கள் மண்ணில் பொன்விழா காணும் எம்மவர்க்கு

# இந்து மகா சபையினரது இனிய நல்வாழ்த்துக்கள்...

சங்கம் வைத்து தங்கத் தமிழ் வளர்த்த மதுரை மாநகருக்கு ஈடாக சைவ மன்றம் அமைத்து மதத்தை வளர்க்கும் மாத்தளை மாதவச் செல்வங்களே, நீங்களும் மாண்புற்றிலங்க மாரித்தாயின் திருப்பாதம் "பணிகின்றோம்"

நற்சிந்தை ஒருமித்த தியாகச் சீலர்களால், ஸ்தாபித்து கருத்தொருமித்த காவலர்களால் கட்டிக் காத்தவை இன்று காவியம் படைக்குதையா!

மன்றங்களை அமைத்து மானுடப்பிறவிகளை மாண்புறச் செய்வது இம் மாத்தளை மண்ணின் மரபன்றோ இதில் மன்னவனாய்த் திகழ்வது நீயன்றோ.

அன்னையின் திருவருளால் ஐம்பதுகளில் ஆரம்பித்து அளப்பரிய பணிகள் பலபுரிந்து ஐம்பதைத் தொடும் சைவ மகா சபையே, அனைவருக்கும் முன்னுதாரணமாக அமைந்த அவையே, இப்பண்ணகாமம் உன் பவள மாளிகையையும், வைர மாளிகையையும், சுமக்கத் துடிக்கின்றது, ஏனெனில் பல மாளிகைகள் அமைவது தானே மண்ணுக்குப் பெருமை.

கண்ணும் கருத்துமாய் கட்டிக்காத்து, கட்டுக் கோப்பையும் பாதுகாத்து வரும் காவலர்களே உங்களனைவருக்கும், காலம் உள்ளவரை, ஏன் எம் கன்னித் தமிழ் உள்ளவரை நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளளோம்.

பல நல்லவர்கள், வள்ளவர்கள் கூடி நற்றமிழ்பாடி நம் மண்ணில் எடுக்கும் இப்பொன்விழா பல நல்லதை சிந்திக்க, செயலாற்ற நலமுடன் அமைவதுடன் இத்தெய்வீகத் திருமலரும் நறுமணம் கமழ நம் தேவியின் திருப்பாதகமலங்களைப் பணிகின்றோம்.

**இங்ஙனம்.**

**நிர்வாகம்**

பே. பாலசுப்பிரமணியம்
(தலைவர்)

என்.எம். இந்திரா தனேந்திரன்
(செயலாளர்)

**இந்து மகா சபை - மாத்தளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை சைவ மகா சபை தமிழும் சைவமும் இருக்கும்
சிறப்புடன் என்றென்றும் நிலை பெற்று இருக்க
வாழ்த்துகின்றோம்...

# MAY FLOWER TEXTILES

**NO: 147-B/10,**
**KEYZER STREET,**
**COLOMBO - 11.**

**TEL: 011-2422698,**
**FAX: 2384505**

**E-mail. maytex@sltnet.lk.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# எங்கள் மண்ணில் பொன்விழா காணும் எம்மவர்க்கு
# இந்து மகா சபையினரது இனிய நல்வாழ்த்துக்கள்...

சங்கம் வைத்து தங்கத் தமிழ் வளர்த்த மதுரை மாநகருக்கு ஈடாக சைவ மன்றம் அமைத்து மதத்தை வளர்க்கும் மாத்தளை மாதவச் செல்வங்களே, நீங்களும் மாண்புற்றிலங்க மாரித்தாயின் திருப்பாதம் "பணிகின்றோம்"

நற்சிந்தை ஒருமித்த தியாகச் சீலர்களால், ஸ்தாபித்து கருத்தொருமித்த காவலர்களால் கட்டிக் காத்தவை இன்று காவியம் படைக்குதையா!

மன்றங்களை அமைத்து மானுடப்பிறவிகளை மாண்புறச் செய்வது இம் மாத்தளை மண்ணின் மரபன்றோ இதில் மன்னவனாய்த் திகழ்வது நீயன்றோ.

அன்னையின் திருவருளால் ஐம்பதுகளில் ஆரம்பித்து அளப்பரிய பணிகள் பலபுரிந்து ஐம்பதைத் தொடும் சைவ மகா சபையே, அனைவருக்கும் முன்னுதாரணமாக அமைந்த அவையே, இப்பண்ணகாமம் உன் பவள மாளிகையையும், வைர மாளிகையையும், சுமக்கத் துடிக்கின்றது, ஏனெனில் பல மாளிகைகள் அமைவது தானே மண்ணுக்குப் பெருமை.

கண்ணும் கருத்துமாய் கட்டிக்காத்து, கட்டுக் கோப்பையும் பாதுகாத்து வரும் காவலர்களே உங்களனைவருக்கும், காலம் உள்ளவரை, ஏன் எம் கன்னித் தமிழ் உள்ளவரை நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளளோம்.

பல நல்லவர்கள், வள்ளவர்கள் கூடி நற்றமிழ்பாடி நம் மண்ணில் எடுக்கும் இப்பொன்விழா பல நல்லதை சிந்திக்க, செயலாற்ற நலமுடன் அமைவதுடன் இத்தெய்வீகத் திருமலரும் நறுமணம் கமழ நம் தேவியின் திருப்பாதகமலங்களைப் பணிகின்றோம்.

**இங்ஙனம்.**

**நிர்வாகம்**

| | |
|---|---|
| பே. பாலசுப்பிரமணியம் (தலைவர்) | என்.எம். இந்திரா தனேந்திரன் (செயலாளர்) |

**இந்து மகா சபை - மாத்தளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை சைவ மகா சபை தமிழும் சைவமும் இருக்கும்
சிறப்புடன் என்றென்றும் நிலை பெற்று இருக்க
வாழ்த்துகின்றோம்...

# MAY FLOWER TEXTILES

**NO: 147-B/10,**
**KEYZER STREET,**
**COLOMBO - 11.**

**TEL: 011-2422698,**
**FAX: 2384505**

**E-mail. maytex@sltnet.lk.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இறையருள் கிட்டிட இறைஞ்சும்

## இந்து இளைஞர் மன்றம்
## மாத்தளை

எமது இந்து சமயத்தின் பெருமையையும் தொன்மையையும் நாகரீகச் சிறப்பையும் கட்டிக்காப்பது இந்துக்களாகிய எமது தலையாய கடமை என்பதை உணர்ந்து, காலத்தின் கட்டாயத்தை அறிந்து, கற்றுணர்ந்த நம் பெரியோர்களால் ஆரம்பிக்கப்பட்டு அயரா அறப்பணி, சமூகப்பணியாற்றி அரைநூற்றாண்டைத் தொட்டர்தும் அம்பிகையின் திருவருட் கடாட்சமே!

எம் மண்ணில் சமய வளர்ச்சிக்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் அளப்பரிய பணிபுரிந்து எம்மவர்க்கெல்லாம் வழிகாட்டியாய் இயங்கும் மூத்த சபை மாத்தளை சைவ மகாசபை என்றால் அது மிகையல்ல.

இந்த இந்து சமய அமைப்பினை ஆரம்பித்த ஸ்தாபகப் பெருந்தகைகளையும், அவ்வப்போது அவையை அலங்கரித்து அறப்பணிப்புரிந்த தலைமைகளையும சீரிய நோக்கில் சிரமேற்கொண்டு செயலாற்றிய செயலுனர்களையும் எங்கும் இந்து சமயப் புகழ் எட்டிட அங்கம் வகித்து அயராதுழைத்த அங்கத்துவப் பெருந்தகைகளையும் இப்பொன்விழா காணும் போது நினைவுகூர்ந்து வளர்ச்சிக்கு வழிகோலிய வள்ளல்களுக்கு வணக்கம் தெரிவிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமே.

எம்மண்ணில் பொன்விழா காணும் எமது மூத்தவர்களுக்கு எல்லாம்வல்ல மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் திருவருள் கிட்ட இறைஞ்சுகின்றோம்

கு. கனகராஜா
தலைவர் இந்து இளைஞர் மன்றம்
மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ மகா சபையின் ஆக்கபூர்வ பணிகள் தொடர
எங்கள் நல்வாழ்த்துக்கள்...!


# TAPROBANE TRADING OVERSEAS (PVT) LTD.

**NO: 220, MESSENGER STREET, COLOMBO - 11.**

**TEL : 2449425, 2333076**

**FAX : 2386120**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"வள்ளுவர் தந்த திருமறையைத் - தமிழ்
மாதின் இனிய உயிர் நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவேமே - என்றும்
உத்தம ராகி ஒழுகுவோமே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை வாழ் தமிழ் மக்களிடம் நீங்கா இடம் பெற்ற
சைவ மகா சபை பல்லாண்டு நீடூழி வாழ்க...!

# KANNAN GROUP OF COMPANIES

**NO:93,95,**
**MAIN STREET,**
**COLOMBO - 11.**

**TEL: 2421967,**
**5338393**
**FAX: 2331491**

**E-mail sunmark@isplank.lk.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாத்தளை
## பரமகுரு ஸ்வாமிகள்

ஸ்வாமிகள்
1904ம் ஆண்டு மாத்தளையில் சமாதியடைந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை சைவ மகா சபை 2004ல் பொன் விழாவைக்
கொண்டாடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்...

# SADANAS

**NO: 122/1A, KEYZER STREET,**
**COLOMBO - 11.**

**TEL: 2438771**
**2449424**
**FAX: 2449424**

**E-mail sadana@ vinet.lk.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை சைவ மகாசபை

## கௌரவ செயற்குழு உறுப்பினர்கள், 2003—2004



பொ. செல்வரத்தினம்
தலைவர்



மு. வீரபுத்திரன்
செயலாளர்



கு. பரமநாதன்
பொருளாளர்



சி.மா. மருதநாயகம்
உப தலைவர்



த. கனகராஜா
உப தலைவர்



அ. சோமசுந்தரம்
இணைச் செயலாளர்



லெ. கணேஷ்
உப செயலாளர்



கு. புண்ணியமூர்த்தி
கணக்காய்வாளர்—மலராசிரியர்



மாத்தளை கார்த்திகேசு
மலர் ஆசிரியர்



சி.அ.விஸ்வலிங்கம்



மு. சபாபதி



க. சரவணமுத்து



சி.க. ரபீந்திரகுமார்



மா. அழகுராஜ்



மு. சிவஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை சைவ மகாசபை

## கௌரவ செயற்குழு உறுப்பினர்கள், 2003—2004


மு.க.சுந்தரேஷன்


சி.நடராஜன்


வெ. சுப்பையா


வெ.கா.பாலசுந்தரம்


மு. சின்னத்தம்பி


மா.கா.பழனிவேலு


சி. திருஅருள்செல்வன்


ஆ. சண்முகசுந்தரம்


ச. சந்திரசேகரம்


ச. இராமச்சந்திரன்


பூ. இராமச்சந்திரன்


வே.க. ஸ்ரீனிவாசன்


க. பாலசுப்பிரமணியம்


ச. நடேசு


பெ. தங்கவேலு


த. இராஜகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் - மாத்தளை



ஸ்ரீ எழுமுக காளியம்மன் ஆலயம் - சுடுகங்கை



அழகர் பெருமான் ஆலயம் - வெள்ளைக்கல்லு




ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் - இரத்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்
மாத்தளை.



ஸ்ரீ பிள்ளையார் கோயில்
மாத்தளை.



இந்து கல்லூரி பிள்ளையார் ஆலயம்
மாத்தளை.



ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வாரியப்பொல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ மகாசபையின் ஆரம்பகாலம் முதல் 10 ஆண்டுகளுக்கு மேலாக பாதுகாவலராக இருந்தவர்கள்



லெ. தியாகராஜா செட்டியார்
அவர்கள்



அமரர் க. குமாரசாமி
அவர்கள்

## இம்மலரில் இவர்களை நினைவு கூருகின்றோம்



சைவ மகாசபையின் முதலாவது தலைவர்
அமரர் ப. இராஜேந்திரம்



2004 இல் சைவ மகாசபையின் செயலாளராக
இருந்த போது அமரரானவர்
மு. செல்வமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பணி தொடர
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்...

# LAAVANYA JEWELLERY

**22KT GOLD JEWELLERY**



**NO:112 (88J)**
**KOTUGODELLA VEEDIYA,**
**KANDY.**

**TEL: 081 - 2224026**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை சைவ மகாசபை

# பொன் விழா

## சிறப்புற நடைபெற நிதியுதவி செய்த வள்ளல்கள்

| | | |
|---|---|---|
| 01. திரு. இரா. புவனேந்திரன் | - | கொழும்பு. |
| 02. திரு. ஏ. ராஜசேகரன் | - | கொழும்பு. |
| 03. திரு. சோ. புஸ்பராஜா | - | கொழும்பு. |
| 04. திரு. யோ. ஜெயராஜ் | - | தெகிவளை. |
| 05. திரு. ஸ்ரீகாந்த் | - | தெகிவளை. |
| 06. திரு. மா. ரத்னாஹரன் | - | தெகிவளை. |
| 07. திரு. மு. சிவஜோதி | - | தெகிவளை. |
| 08. திரு. S. லெட்சுமணன் | - | கொழும்பு. |
| 09. திரு. ஏ. தியாகராஜா பிள்ளை | - | கொழும்பு. |
| 10. திரு. ச. நல்லைநாதன் | - | மாத்தளை. |

## தையல் இயந்திரம் அன்பளிப்பு செய்வோர்

| | | |
|---|---|---|
| 1. திரு. D. வேலாயுதம் | - | கொழும்பு. |
| 2. திரு. K. கருப்பையா | - | 19, நிக்கலோயா வீதி, இரத்தோட்டை. |
| 3. திரு. மா. அழகுராஜா | - | 26, ஆற்றங்கரை வீதி, மாத்தளை. |
| 4. திரு. பெ. தங்கவேல் | - | கணக்காய்வாளர், 70, டோலவத்த வீதி, மாத்தளை. |
| 5. திரு. ந. மோகன் | - | சோமசுந்தரம் வீதி, மாத்தளை. |
| 6. திருமதி. சோமசேகரன் | - | சோமசுந்தரம் வீதி, மாத்தளை. |
| 7. திரு. எஸ். நாகலிங்கம் | - | மாத்தளை. |
| 8. திரு. திரு. எஸ். ரவீந்திரன் | - | A.E.F. மாத்தளை. |
| 9. திரு. ஸ்ரீ மகாதேவா | - | மாத்தளை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மாத்தளை சைவ மகா சபையின் வரலாற்றுக் குறிப்புகள்

சகல செல்வங்களும் பொலிந்து விளங்கும் இயற்கை எழில் மிகு இலங்கையின் மத்திய பகுதியில் பல் வளங்களும் நிறையப் பெற்றதாய், அன்பும், பண்பும், சீலமும் மிக்க நன் மக்கள் வதியும் மாத்தளை எனும் புண்ணிய பூமியில் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சமயப்பற்றும், தமிழ்ப்பற்றும், சமுதாயப் பணியும் தீர்க்க தரிசனமும் கொண்ட இளைஞர்களால், சைவத்தையும், தமிழையும் வளர்க்க வேண்டுமென்ற பெருநோக்கில் ஆரம்பிக்கப்பட்டதே சைவ மகா சபை. இச்சபை சமயம், தமிழ், கல்வி, கலாச்சாரம் ஆகிய பல் துறைகளிலும் பல அரும், பெரும் பணிகளைத் திறம்பட நடாத்தி வந்துள்ளது. இன்று பெரும் பொருட் செலவில் "பொன் விழா" வை மிக விமரிசையாகக் கொண்டாடுகின்றது.

பொன் விழாவை மகிழ்ச்சிகரமாகப் பெரு விழாவாகக் கொண்டாடும் இக்கால கட்டத்தில் அதன் கடந்த கால வரலாற்றை நோக்கிப் பார்க்க வேண்டியது எம்முன்னே கட்டாயமாகவுள்ளது. 1954ம் ஆண்டளவில் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் சுற்று வட்டாரத்தில் குடியிருந்த இந்து இளைஞர்கள் பலர் ஒன்று கூடி மகா சிவராத்திரி விழாவைக் கொண்டாட தீர்மானித்தனர். பல நன்நோக்கு கொண்ட பெரியோர்களின் உதவி ஒத்தாசைகளுடன் மகா சிவராத்திரி விழாவை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் ஒரு வில்லுப்பாட்டு நிகழ்வுடன் ஆரம்பித்தனர். வில்லுப்பாட்டு நிகழ்ச்சி முடிவுற்றதும் அங்கு கூடியிருந்த அடியார்கள் சுமார் நூற்றுக்கு அதிகமானோர் அனைவரும் மாத்தளை நகரைச் சுற்றி பஜனை பாடி வலம் வந்து "மகா சிவராத்திரி" இரவைக் கழித்தனர். அன்று ஒன்று கூடிய இளைஞர்கள், மறு வருடத்தில் மகா சிவராத்திரியை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று தீர்மானித்தனர். அந்தச் சிறந்த எண்ணத்தின் விளைவாக 1955ம் ஆண்டு, மாத்தளை இராஜ வீதியில் இருந்த விளையாட்டுக் கழகத்தில் மாலைப் பொழுதில் ஒன்று கூடி ஒரு நிருவாக சபையைத் தெரிவு செய்தனர். இப்பொழுது பொலிஸ் அதிபர் காரியாலயம் அமைந்துள்ள இடத்தில் தான் விளையாட்டுக் கழகம் அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய கூட்டத்தில் சபையின் பெயர் மாத்தளை சைவ மகா சபை என அங்கீகரிக்கப்பட்டது. அன்றைய கூட்டத்திற்கு சுமார் நாற்பது பேர் வருகை தந்திருந்தனர். அவர்களில் பின்வருபவர்கள் அவ்வருட (1955) நிருவாக சபைக்குத் தெரிவானார்கள்.

தலைவர்: செல்வன். ப.இராஜேந்திரம்
செயலாளர்: செல்வன்.வெ.திருச்செல்வம்
பொருளாளர்: செல்வன். ம.வீ.சுப்பையா

நிருவாக சபை உறுப்பினர்கள்:

செல்வன். ம. சங்கரன்
செல்வன். மா.இராஜலிங்கம்
செல்வன். சு.நாகராசா
செல்வன். பொ.தர்மலிங்கம்
செல்வன். அ.விசுவலிங்கம்
செல்வன். வே.கெங்காதரம்
செல்வன். சு.பாலகிருஷ்ணன்
செல்வன். வே.தாமோதரம்

சபையின் பாது காவலர்களாக உயர் திரு. க.குமாரசாமி அவர்களும், உயர் திரு. லெ.தியாகராஜா செட்டியார் அவர்களும் தெரிவானார்கள். அன்றைய கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் சபையின் சாதாரண உறுப்பினர்களாக இணைந்து கொண்டனர். அவ்வாண்டு சபை மகா சிவராத்திரி விழாவை மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் மிக விமரிசையாகவும் சிறப்பாகவும் கொண்டாடியது. மாத்தளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் மகா சிவராத்திரி விழாவை ஆரம்பித்து வைத்த பெருமை சைவ மகா சபைக்கே உண்டு. அதனைத் தொடர்ந்து மகா சிவராத்திரி விழாவை ஆண்டு தோறும் சிறப்பாகக் கொண்டாடி வந்தனர். விழாவில் நாட்டின் பலபாகங்களில் இருந்து பேச்சாளர் களையும் கலைஞர்களையும் அழைத்து வந்து சிறப்பித்தனர். விழாவில் விரதமிருந்து விளித்திருப்போருக்கு இரண்டு மூன்று தடவைகள் கோப்பி, கடலை, பிரசாதம் வழங்கப்பட்டது. நான்கு சாமப் பூசைகளும் முறையாக நடாத்தப்பட்டது.

20-01-1960 இல் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் முதற்கட்டத் திருப்பணி வேலைகள் முடிந்து சமய முறைப்படி குடமுழுக்கு விழா நடைபெற்றப்போது சைவ மகாசபை அதில் பங்குகொண்டு பெரும் தொண்டாற்றியது.

சமயச் சொற் பொழிவுகள் - 1955 முதல் 1964 வரை சைவ மகா சபை காலத்திற்கு காலம் சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர், உயர் திரு. C.S.S. மணிபாகவதர், கவிஞர். வி.கந்தவனம் B.A, கொழும்பு விவேகானந்த சபையினர், நாமக்கல் கவிஞர். இராமலிங்கம் பிள்ளை, கவியோகி சுத்தானந்த பாரதியார், உயர்திரு. குன்றக் குடி அடிகளார், உயர்திரு. கிருபானந்தவாரியார் ஆகிய பெரியோர்களை அழைத்து வந்து சொற் பொழிவுகளை நடாத்தி வந்துள்ளது.

04-03-1962ம் திகதியன்று நடாத்திய மகா சிவராத்திரி விழாவினை திரு. சு.திருச்செந்தூரன் B.A அவர்களது இனிய சொற் பொழிவும், இசைச் சித்தர் திரு. வே. அருமைநாதன், செல்வன் இ.சுந்தரராஜ், செல்வி. சாந்தி இரத்தினசபாபதி, செல்வி. இராதா தியாகராஜா ஆகியோர்களது இசை நிகழ்ச்சிகளும் மிகவும் சிறப்பாக அலங்கரித்தன.

14-09-1963ம் திகதியன்று சைவ மகா சபையின் வரலாற்றில் பொன்னால் எழுதப்பட வேண்டியதாகும். மந்தண்டாவளை பரமகுருசாமி மடத்தில் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் M.A. Ph.D (இலங்கைப் பல்கலைக் கழகம்) அவர்களால் இலவச நூல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

12-10-1963ம் திகதியன்று மாத்தளை ஸ்ரீ முத்து விநாயகர் கோயிலில் மகா விஷ்ணு விழாவை நடாத்தியது. அன்று சொல்விருந்தளிக்க பேராசிரியர். சு.வித்தியானந்தன் M.A.Ph.D (இலங்கைப் பல்கலைக் கழகம்), திரு. அ.சண்முகதாஸ் (B.A(Hons), திரு.நா.முத்தையா (ஆத்மஜோதி ஆசிரியர்) திரு.வெ. இளங்கோ, திரு. ஞா.சுந்தரமூர்த்தி M.A. ஆகியோர் பங்கு பற்றினர். சமயக் கவியரங்கில் கவிஞர் நவாலியூர் திரு. சு.சொக்கநாதன், திரு. வி.கந்தவனம் B.A, திரு. ஈழவாணன், திரு. ஈழக்குமார் ஆகியோர் பங்குபற்றினர்.

03-11-1963ல் மாத்தளை மாவட்ட சைவ சமயப் பாடத்தேர்வை வகுப்பு முறையில் நடாத்தியது. ஏறக்குறைய 900 மாணவ, மாணவிகள் தேர்வுக்குத் தோற்றினர்.

1964ல் சபை தனது 10வது ஆண்டு மகா சிவராத்திரி விழாவை இனிதே நடாத்தியது. திரு. சிவப்பிரகாசம் M.A. ந.அ.தியாகராசன் ஆகியோர் சொல் விருந்தையும் சங்கீத பூசணம் செல்வி. மாது சிரோமணி வேலாயுதர், செல்விகள் மனோன்மணி, சுப்பையாப் பிள்ளை, குணேஸ்வரி செல்லையா, திரு. ஏ.ஆர். கிருஷ்ண பாகவதர் ஆகியோர் இசை விருந்தையும், செல்வன்கள் இ.சுதந்திரராஜ், லலிதா சுகீர்தலிங்கம், கலைவாணி சுகீர்தலிங்கம், இரத்தின சபாபதி, திரு.டி.வி. பிச்சையப்பா, ஏ.எம்.சந்திரசேகரன், எஸ்.சுப்பையா ஆகியோர் சிறப்பு இசைக் கருவி விருந்தையும், செல்வன்கள். பொ.இராஜகுலேந்திரன், சி.கதிர்காமநாதன், மாத்தளை சரஸ்வதி கலாமன்றத்தினர் பக்திப்பாடல்களையும் பாடிச் சிறப்பித்தனர். எமது சபை நடாத்திய சமய பாட தேர்வில் திறமை காட்டியவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

வானொலி புகழ் லண்டன் கந்தையா நாடகக் குழுவினர்களைக் கொண்டு சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை நிகழ்ச்சி ஒன்றையும் மாத்தளை புனித தோமையர் கல்லூரியில் மேடையேற்றியது.

26-04-1964 ல் இரத்தோட்டை தேர்த்திருவிழாவன்று சபை இன்னிசை நிகழ்ச்சி ஒன்றை நடாத்தியது. அந்த நிகழ்ச்சிகளில் செல்விகள் மனோன்மணி சுப்பையாபிள்ளை, கமலா சுப்பையாபிள்ளை இன்னிசை விருந்தையும், செல்வன். சி. கதிர்காமநாதன் பக்திப்பாடலையும். கவிஞர். ஈழவாணன்,செல்வன். பொ.இராஜகுலேந்திரன் ஆகியோர் சொல்விருந்துகளையும் அளித்தனர்.

23-05-1964ம் திகதியன்று தமிழ்மணி வி.எஸ்.கணேசசுந்தரம் அவர்களைக் கொண்டு வெள்ளைக்கல் அழகர் கோவிலில் இலவச சைவ சமய வகுப்பொன்று சபையால் திறந்து வைக்கப்பட்டது. மேலும் மாத்தளை நகரில் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திலும், கதிரேசன் கோவில், பரமகுருசாமி மடம், நாகொல்லை முத்துவிநாயகர் கோவில், வாரியபொல தோட்டத் தமிழ்ப் பாடசாலை ஆகிய இடங்களிலும் இலவச சைவ சமய வகுப்புக்களை சபை நடாத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. 31-10-1964ல் மாத்தளை மாவட்ட சைவ சமயப் பாடத் தேர்வு மாத்தளை பாக்கிய வித்தியாலயம், தமிழ் கலவன் பள்ளிகூடம், கிறித்தவத் தேவாலயக் கல்லூரி ஆகிய மூன்று பாடசாலைகளிலும் நடைபெற்றது சுமார் 1000 மாணவ மாணவியர் பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

அன்றை காலகட்டத்தில் சபையின் காவலர்களாக திருவாளர்கள் க. குமாரசாமி, லெ.தியாகராஜா செட்டியார், சி.ரா. செல்வரட்னம், இரா.தங்கவேல் செட்டியார், எஸ். செல்லக்கண்டு ஆகியோர் ஊக்கத்துடன் சபையை வழிநடத்தினர். அவர்களை இன்றும் சபை நன்றியுடன் நினைவு கூருகின்றது.

சபை சமயப்பணியோடு தொடர்ச்சியாக 1983ம் ஆண்டு காலம் வரை மகா சிவராத்திரி விழாவை வெகு சிறப்பாக நடத்தி வந்தது குறிப்பிடதக்கது. அதே நேரத்தில் சபை தனது 25வது வெள்ளி விழாவை முன்னிட்டு த.மாரிமுத்து செட்டியார் அவர்களின் தலைமையின் கீழ் மந்தண்டாவளை இந்துக் கல்லூரியில் பிள்ளையார் கோவில் ஒன்றையும் கட்டிக் கொடுத்து, கும்பாபிஷேகமும் செய்தமை மிகச் சிறப்பு அம்சமாகும்.

1983ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின் சபையின் செயற்பாடுகளில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டது. ஆயினும் அமரர் திரு. சு.மகாதேவா அவர்களின் இடைவிடா முயற்சியால் 1994ம் ஆண்டு சபை மீண்டும் புனரமைக்கப் பட்டு திரு. மு.சபாபதி அவர்களின் தலைமையில் ஒரு நிருவாக சபை அமைக்கப்பட்டுச் செயல்பட ஆரம்பித்தது. அக்கால தேவைகளை சபை உணர்ந்து சமயப் பணிகளோடு மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் கவனம் செலுத்தியது. வருடா வருடம் பாடசாலை மாணவ மாணவிகளுக்கு சுமார் ஐம்பதாயிரம் ரூபா வரையிலான பெறுமதியைக் கொண்ட அப்பியாசப் புத்தகங்களைப் பகிர்ந்தளித்தது. திரு. மு.சபாபதி தலைவராகப் பணிபுரிந்த காலத்தில் மந்தண்டாவளை இந்துக் கல்லூரியில் கட்டப்பட்டு இருந்த விநாயகர் ஆலயம் பன்னிரண்டு ஆண்டுகளின் பின் புனரமைக்கப்பட்டு திரும்பவும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சபை விசேடமாக திருவள்ளுவர் குருபூசையை நடாத்தியது. அது தவிர சமயப் பரீட்சைகளை பாடசாலை மட்டத்தில் தொடர்ச்சியாக நடாத்தி பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வந்துள்ளது. சமயப் பரீட்சைகளைச் சிறப்புற நடாத்த பெரும் பங்காற்றிய அமரர் க.சின்னத்தம்பி உருத்திரா ஐயா அவர்களின் பணி நினைவுக் கூரக்கூடிய ஒன்றாகும்.

நீண்ட இடைவெளியின்பின் 2001 ம் ஆண்டு ஜுலை மாதம் மாத்தளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் ஆடிவேல் விழாவை வெளிவீதியில் தேர் இழுத்து மிக விமரிசையாகவும் சிறப்பாகவும் கொண்டாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004ம் ஆண்டு சபை ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்வதால் அதனை சபையின் பொன் விழா ஆண்டாகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று சபையின் தலைவர் திரு.பொ.செல்வரத்தினம் அவர்களின் தலைமையிலான செயல் குழு தீர்மானித்து. அதனை முன்னிட்டு 2004ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி புதுவருட வாழ்த்து மடல்கலை சைவ அபிமானிகளுக்கு வழங்கி மகிழ்ச்சியுற்றது. அதனை அடுத்து பொங்கல் விழாவாக 18-01-2004 ம் திகதியன்று மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் மலையக பாரம்பரிய கலை நிகழ்சி ஒன்றினை யாவரும் பாராட்டும் வண்ணம் நடாத்தியது. அதற்கு அடுத்த நிகழ்சியாக 25-01-2004ம் திகதியன்று இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய கலாச்சார மண்டபத்தில் "தினக்குரல்" அதிபர் திரு. எஸ்.பி.சாமி அவர்களின் தலைமையில் மேளதாளத்துடன் இந்து சமய முறைப்படி இருபது பெருந் தோட்டத் தமிழ் தம்பதியர்களுக்கு சட்டப்படி திருமணம் செய்து வைத்து விருந்து உபசாரமும் நடாத்தி, பெறுமதி மிக்க பரிசுகளும் வழங்கிக் கௌரவித்தது. அதன் சிறப்பு அதிதியாக திரு. ராஜசேகரம் அவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

பிரசித்தி பெற்ற பல வைத்திய கலாநிதிகளைக் கொண்டு கம்மடுவ தோட்டம், செலகம தோட்டம், தமிழகல தோட்டம் ஆகிய இடங்களில் இலவச மருத்துவ முகாம்களை சைவ மகா சபை நடாத்தியது. இந்த முகாம்களில் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். சைவ மகா சபை அதன் ஐம்பதாவது ஆண்டு பூர்த்திப் பொன் விழாவை 2004ம் ஆண்டு யூலை 31ம் நாளும் ஆகஸ்ட் 1ம் நாளும், இருதினங்கள் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் மிகக் கோலாகலமாக கொண்டாடுகிறது. தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியை செல்வி. இரா.ருக்மணி எம்.ஏ. அவர்கள் சிறப்புச் சொற் பொழிவாளராகக் கலந்து சிறப்பித்தார்கள். மற்றும் நம் நாட்டு அறிஞர்களினதும், கலைஞர்களினதும் சிறப்பு நிகழ்சிகளாக சொற்பொழிவுகளும் நடனங்கள், தாளவாத்தியக் கச்சேரி ஆகியன இடம் பெற்றன.

## தையல் இயந்திரங்கள் வழங்கல்

வசதியற்ற குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பத்துக் குடும்பங்களுக்கு சபை மூலம் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடக் கூடியதாகும்.

## மேல்படிப்புக்கு உதவி

மேல்படிப்பை தொடரும் பல்கலைக் கழகம் செல்லும் இருவருக்கு இச்சபை மூலம் புலமைப்பரிசில் பணமும் வழங்கப்பட்டதுடன் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையில் தேறிய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டமையும் எழுதப்பட வேண்டிய தொன்றாகும்.

## பொன் விழா மலர்

பொன் விழா நிகழ்வு நினைவாக சைவ மகா சபை அன்றைய தினம் பொன் விழா மலர் ஒன்றையும் வெளியிட்டு வைத்தது. சபை அங்கத்தவர்களுக்கும் விஷேடமாக அழைக்கப்பட்டவர்களுக்கும் ஞாபக சின்னங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டனர். மாத்தளை சைவ மகாசபையின் இன்றைய வளர்ச்சிக்கு ஒவ்வொரு கால கட்டத்திலும் படிக்கல்லாக இருந்து சேவையாற்றிய அனைவரையும் நினைவு கூருவதில் பெருமகிழ்சி அடைகின்றேன். மாத்தளை சைவ மகாசபையின் சேவை மென்மேலும் வளர்ச்சி பெற்று பிரகாசிக்க மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்பாளின் அருட் கடாச்சத்தை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**வணக்கம்.**

**மாத்தளை கார்த்திகேசு.**
**(ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமத் பகவத்கீதையின் தோற்றமும், பொருளடக்கமும்

சுவாமி ஆத்மகனானந்தஜி
இராமகிருஷ்ணமிஷன் — கொழும்பு

## நூல் விளக்கம்:

இந்து மதத்தின் அடிப்படை நூல்களாக விளங்கும் நால்வகை வேதங்களை அனைவரும் அறிவர். ஒவ்வொரு வேதத்திலும் அதன் உயிர்நாடியாக விளங்கும் பகுதி "உபநிடதம்" என்றழைக்கப்படுகிறது. இந்து மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாகிய இறை தத்துவம், ஆன்ம தத்துவம், பிரபஞ்ச தத்துவம், மறுபிறவிக் கோட்பாடு, சிருஷ்டி தத்துவம் போன்ற பல முக்கிய விடயங்களை உள்ளடக்கியதுதான் உபநிடதப் பகுதி. நான்கு வேதங்களையும் சார்ந்த உபநிடதங்களின் எண்ணிக்கை பல. இந்த அனைத்து உபநிடதங்களின் சாரமாக விளங்கும் நூலே ஸ்ரீமத் பகவத்கீதை ஆகும். மகாபாரதப் போர் தொடங்குமுன், அர்ஜுனனுக்கு பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறிய உபதேசமே இந்நூலாக அமைந்துள்ளது. "பகவத்கீதை" என்றால் "இறைவனின் பாடல்" என்று பொருள்.

கீதையின் பொருளடக்கத்தைக் குறித்து பின்வரும் சுலோகம் ஒரு உவமானத்தின் மூலம் கூறுகின்றது.

ஸர்வோபநிஷதோ காவோ தோக்தா கோபாலநந்தன:
பார்தோ வத்ஸ: ஸுதீர்போக்தா துக்தம் கீதாம்ருதம் மஹத்

இதன் பொருள்: உபநிடதங்கள் அனைத்தும் பசுக்கள், பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அப் பசுக்களைக் கறப்பவர், அர்ஜுனன் கன்று, அமிர்தம் போன்ற பாலே கீதை, அதைப் பருகுபவர் ஞானியர்.

எனவே வேதங்களின் சாரமாகிய உபநிடதங்களின் கருத்தை விளக்கும் நூலே பகவத்கீதை, கீதையின் ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் இவ்வுண்மை கூறப்படுகிறது.

## கீதையின் தோற்றம்

கௌரவர்கள் பாண்டவர்களுக்கு இழைத்த அநீதியின் அடிப்படையில் மூண்ட போரே மஹாபாரதப் போர் என்பதை அனைவரும் அறிவர். கௌரவர்களின் தந்தையும், மன்னனுமாகிய திருதராஷ்டிரன் பார்வையற்றவர். எனவே அவர் விரும்பினால், அரண்மனையில் இருந்துகொண்டே மஹாபாரதப் போரைக் காணும் சக்தியை அவருக்கு அளிப்பதாக வியாச முனிவர் கூறுகிறார். தன் மக்கள் போரில் மடிவதைக் காண விரும்பாத அம்மன்னன், தனது அமைச்சர் சஞ்சயனுக்கு அச்சக்தியை அளிக்குமாறு முனிவரிடம் வேண்டுகிறார். முனிவரும் அவ்வாறே அருள, சஞ்யன் அரண்மனையில் அமர்ந்தவாறே, கண்ணுக்கு எட்டாத தொலைவில் நடைபெறும் போரைத் தனது ஞானக் கண்ணால் கண்டவாறே திருதராஷ்டிரனுக்கு விவரிக்கிறார். ஆரம்பத்தில் மன்னர் அதில் ஆர்வம் காட்டவில்லை. பீஷ்மர், துரோணர், கர்ணன் போன்ற மஹாவீரர்கள் தன் பிள்ளைகளோடு இருந்ததினால், வெற்றி தங்கள் பக்கமே என்று அவர் இறுமாந்திருந்ததே அதற்குக் காரணம். ஆனால் போரின் பத்தாவது நாளன்று பீஷ்மர் வீழ்த்தப்பட்டு அம்புப் படுக்கையில் கிடக்கிறார் என்ற செய்தியைக் கேட்டதுமே திருதராஷ்டிரன் மிகவும் அதிர்ச்சியடைந்து, அன்றைய போரை மீண்டும் விளக்கமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும்படி சஞ்சயனிடம் கேட்கிறார். அதைக் கவனத்துடன் கேட்ட பிறகு, போர் தொடங்கிய நாளிலிருந்து நேர்ந்தவற்றை மீண்டும் விளக்கமாகக் கூறும்படிக் கேட்கிறார். இதுவே ஸ்ரீமத் பகவத்கீதையாக உலகிற்குக் கிடைத்துள்ளது. இது மஹாபாரதத்தின் பீஷ்ம பர்வத்தில் 25வது அத்தியாயம் தொடக்கம் 42வது அத்தியாயம் முடிய அமைந்துள்ளது.

## கீதை பிறக்கக் காரணம்

தர்மசேஷத்திரம் என்னும் யுத்தகளத்தில், கௌரவர் படைகளும், பாண்டவர் படைகளும், தத்தம் அணித் தலைவர்களுடன் போருக்கு ஆயத்தமாயிருக்கின்றனர். அச்சமயம் அர்ஜுனன் தனது பகைவர்களை ஒருமுறை நேரில் நன்றாகக் காண விரும்பி, தனது தேரை இவ்விரு படைகளுக்கும் இடையே நிறுத்தும்படி தனது தேரோட்டியான பகவான் ஸ்ரீகிருஷ்ணரைக் கேட்கிறான். அவ்வாறு தேர் நிறுத்தப்பட்டதும், அவன் அவ்விரு சேனைகளிலும் இருந்த தனது தகப்பன்மார், பாட்டன்மார், குருமார், மாமன்மார், சகோதரர், பிள்ளைகள், நண்பர்கள் அனைவரையும் நன்கு பார்க்கிறான். அக்கணம் அவனது மனதில் திடீரென அபரிமிதமான கருணை எழுகிறது. இவர்கள் அனைவரையும் போரில் கொல்ல போகிறோம் என்ற எண்ணம் அவனது மனதில் ஆழ்ந்த விசனத்தை ஏற்படுத்தியது. உடனே அவன் பகவான் ஸ்ரீகிருஷ்ணரை நோக்கிக் கூறுகிறான்: "கிருஷ்ணா! போர் புரியும் நோக்கத்துடன் இங்கு கூடியுள்ள தனது உறவினர்களைப் பார்த்து எனது அவயங்கள் சோர்வடைகின்றன, வாயும் உலர்கின்றது, உடல் நடுக்கமும், மயிர்க்கூச்சலும் உண்டாகின்றன. எனது கையிலிருந்து வில் நழுவுகிறது, உடல் எரிகிறது, நிற்பதற்கும் சக்தியற்றனவாய் இருக்கிறேன். எனது மனம் சுழலுவதைப் போலத் தோன்றுகிறது. இந்த உறவினர்களைக் கொன்று ஒரு நன்மையையும் நான் அடையப் போவதில்லை. நான் வெற்றியை சிறிதும் விரும்பவில்லை. எனக்கு அசுரம் வேண்டாம், வேறு சுகங்களும் வேண்டாம். இப்படிப்பட்ட அரசாலும், போக வாழ்க்கையாலும் என்ன பயன்? இவர்கள் என்னைக் கொன்றாலும், நான் அவர்களைக் கொல்லப் போவதில்லை. அவர்களைக் கொன்றால் என்னைப் பாவம்தான் வந்து அண்டும். அவர்கள் என்னைக் கொல்வாராயின் அது எனக்கு நன்மையே பயக்கும்". இங்ஙனம் கூறிய பின்னர், அவன் தனது வில்லையும், அம்பையும் கீழே எறிந்து விட்டு, மிக்க சோகம் உடைய மனத்துடன் தேர்த்தட்டில் அமர்ந்து விடுகிறான்.

அர்ஜுனனின் இந்த மனக்குழப்பமும், சோகமுமே கீதை பிறக்கக் காரணமாய் இருந்தது. "துன்பம் என்னும் வாயில் வழியாகதான் ஞானமாகிற அரண்மனையில் பிரவேசிக்க முடியும்" என்பதைக் காட்டவே கீதைக்கு வாயிற்படியாக அமைகிறது அர்ஜுனனின் சோகம்.

## பற்றே துன்பத்திற்கு மூல காரணம்:

தொடக்கத்திலேயே கீதை ஒரு பெரிய உண்மையைப் புகட்டுகிறது. பற்று அல்லது பந்தமே துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணம் என்பதே அவ்வுண்மை. தன்னை எதிர்க்கத் திரண்டிருந்தவர்கள் தனது உறவினர்களாக மட்டும் இல்லாதிருந்தால், அவர்களை அர்ஜுனன் உடனே மாய்த்திருப்பான். அந்நிலையில் அவன் மனதிலே மகிழ்ச்சி ஏற்பட்டிருக்குமே ஒழிய, சோகமோ, குழப்பமோ தோன்றியிராது. ஆனால் தனது எதிரிகள் உறவினர் என்ற காரணத்தினால், அவர்கள் மீது அவனுக்கு பாசம் தோன்றி, தனது கடமையை ஆற்ற முடியாது அவன் தவிக்கிறான். அர்ஜுனனுடைய நிலையை ஒரு நீதிபதியோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். மனதிலே எந்தவிதக் குழப்பமோ, தயக்கமோ அல்லது துயரமோ இன்றி குற்றவாளிகளைத் தண்டிக்கிறார் ஒரு நீதிபதி. ஆனால் தனது சொந்த மகனே குற்றவாளியாகத் தன்முன் நிறுத்தப்படும் போது, அவனைத் தண்டிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மனது தயங்குகிறது. பாசத்திற்கும், கடமைக்கும் இடையே அங்கு பெரும் போராட்டமே நிகழ்கிறது.

இப்படிப்பட்ட நிலை ஒரு அர்ஜுனனுக்கோ அல்லது ஒரு நீதிபதிக்கோ மட்டும் நேருவதில்லை. அன்றாட வாழ்வில் நாம் ஒவ்வொருவரும் உலகத்தின் மீதுள்ள பற்றின் காரணத்தினால் இவ்வாறு குழம்பிக் கிடப்பதைக் காணலாம். மனித வாழ்க்கையின் இப் பெரும் சிக்கலை, துயரத்தை, நீக்குவதற்கான வழியை பகவான், அர்ஜுனன் வாயிலாக நம் அனைவருக்கும் கீதையாக அருளியுள்ளார்.

## யோகத்தின் விளக்கம்

ஸ்ரீமத் பகவத்கீதையில் 18 அத்தியாயங்கள் உள்ளன. அதில் மொத்தம் 700 சுலோகங்கள் எனப்படும் இரண்டு வரி செய்யுட்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு யோகம் என்று அழைக்கப்படுகிறது. எனவே பதினெட்டு அத்தியாயங்களால் 18 யோகங்கள் அமைகின்றன. இந்த பதினெட்டு யோகங்களும் கர்ம, பக்தி, ஞான, தியான யோகங்கள் என்ற பொருள். ஆண்டவனோடு இணைதலே யோகத்தின் நோக்கம். கர்ம யோகம் மற்ற யோகங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது மனதைத் தூய்மைப்படுத்தல் என்பது முதல் நிலை. அங்ஙனம் தூய்மை செய்த மனதை பக்தி, ஞானம் அல்லது தியானத்தின் மூலம் ஆண்டவனில் லயிக்கச் செய்தலே யோக சாதனைகளின் முடிவான நிலைப்பாடாகும்.

### கடமையைச் செய், பலனை எதிர்பாராதே:

ஒரு சாதாரண மனிதனுடைய உலக வாழ்க்கையைக் கடல் மீது மிதக்கும் ஒரு பொருளோடு ஒப்பிடலாம். அந்தப் பொருளுக்கு ஓய்வு என்பதே கிடையாது. கடல் அலைகள் அந்தப் பொருளை இங்குமங்குமாக சதா அலைக்கழித்துக் கொண்டே இருக்கின்றன. ஒரு சாதாரண மனிதனுடைய மனதும் அங்ஙனமே அமைதியின்றித் தவிக்கிறது. இப்படி மனம் அலைவதற்கு காரணம் என்ன? இப்படிப்பட்ட மனதை அமைதி பெறச் செய்ய முடியுமா? இக் கேள்விகளை அர்ஜுனன் பகவானிடம் வினவுகிறான்: "மனிதன் தன் விருப்பத்தையும் மீறி ஏன் பாவ காரியங்களில் ஈடுபடுகிறான்? யாரோ அவனைப் பலவந்தமாய் இக்காரியங்களில் தள்ளுவதுபோல் அல்லவா தெரிகிறது. காற்றை அடக்குவது எங்ஙனம் இயலாத காரியமோ அங்ஙனமே இப்படிப் பேயாக அலையும் இம்மனதை அடக்குவதும் இயலாத காரியமே" (அத்தியாயம்: 3-36, 6-34)

இதுதான் அர்ஜுனனுடைய சந்தேகம். உலக மாந்தரின் மனநிலையை அர்ஜுனன் படம் பிடித்துக் காட்டுகிறான். மனதை அடக்குதல் இயலாத காரியம். எனவே அமைதி என்பது உலக வாழ்க்கையில் கிடையவே கிடையாது என்பது அர்ஜுனனின் தீர்மானம்.

ஆனால் மனதைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை பகவான் நிலை நாட்டுகிறார். "மனிதனின் அமைதியின்மைக்குக் காரணம் அவன் மனதில் உள்ள ஆசையும், குரோதமுமே. தினசரி ஆன்ம பயிற்சியாலும், பற்றின்மையாலும் ஆசையை வென்றுவிடலாம் (அத்: 3-37) போகப் பொருட்களை நினைப்பதால் அவை மீது பற்று உண்டாகிறது. பற்று ஆசைக்கு அடிகோலுகிறது. ஆசையிலிருந்து கோபமும், கோபத்தால் மனக்குழப்பமும், மனக்குழப்பத்தால் தெளிவின்மையும், தெளிவின்மையால் புத்தி நாசமும், புத்தி நாசத்தால் வாழ்க்கையே பாழாகிறது (அத்: 2-62, 63)".

எனவே ஆசையை வெல்ல முதல் கட்டமாகப் போகப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும் என்பது புலனாகிறது. அத்துடன் ஒருவன் வாழ்க்கையில் பற்றின்மையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றின்மையை வளர்க்க ஒருவன் தனது உலகக் கடமைகளிலிருந்து விலகி சும்மா இருத்தல் என்பதல்ல. அவ்வாறு சும்மா இருத்தலும் சுலபமல்ல. உலகப்பற்று அவனை சும்மா இருக்க விடாது. எனவே அவன் உலகக் காரியங்களை செய்தே ஆகவேண்டும். ஆனால் அவற்றைப் பற்றின்றி செய்து வந்தால், நாளடைவில் உலகப் பற்று குறைந்து, மனது அமைதியில் நிலை பெறும்.

எனவே கீதையின் அடிப்படை உபதேசம்
**"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே"**
என்பதே. பலனை எதிர்பாராதே என்றால் எத்தகைய பலன்வந்தாலும் ஏற்றுக்கொள்ளல் என்பதாம். அதாவது விருப்பு, வெறுப்பு இன்றி எதையும் எதிர்பார்க்காமலும் எதையும் ஒதிக்கித் தள்ளாமலும் வந்ததை ஏற்று வாழ்தலே கர்ம யோகத்தின் இரகசியமாகும். அன்றாட வாழ்க்கையே யோகமாக வேண்டும் என்பதே கீதையின் முடிவான கருத்து. நாம் என்ன செய்கின்றோம் என்பது முக்கியமல்ல எப்படிச் செய்கின்றோம் என்பதே முக்கியம்.

**'எழுந்து நில், பலவீனத்தை உதறித் தள்ளு'**

வாழ்க்கையில் மனம் துவண்ட போதெல்லாம் தனக்கு தைரியத்தையும், உற்சாகத்தையும் அளித்தது பகவத்கீதையே என்பார் மஹாத்மா காந்தியடிகள். கீதையின் இரண்டாம் அத்தியாயத்தின் மூன்றாம் சுலோகமே தனக்கு மிகவும் பிடித்தது என்பார் சுவாமி விவேகானந்தர். ஏன்? அதில்தான் பகவான் அர்ஜுனனிடம் உள்ள கோழைத் தனத்தைக் கண்டித்து, தைரியத்தைக் கைக்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறார். "தோல்வியைக் கண்டு மனம் தளராதே, தொடர்ந்து முயற்சி செய்து வெற்றியீட்டு" என்று உற்சாகமூட்டுகிறது கீதை.

**நிறைவு**

இங்ஙனம் கர்ம யோகத்தின் மூலம் அமைதி பெற்ற மனதை, இறைபக்தி அல்லது ஞானம் அல்லது தியானத்தின் மூலம் இறைவனோடு ஒன்றுபடுத்தலையும் பகவான் அர்ஜுனனுக்கு போதிக்கிறார்.

மொத்தத்தில் ஸ்ரீமத் பகவத்கீதை ஜாதி, மத, இன, மொழி, வேறுபாடுகளைக் கடந்து, அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு பொது நூல். உலக மக்கள் அனைவரையும் ஒன்று படுத்தும் மார்க்கத்தையும் போதிக்கும் நூல்.

88888

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாதுமாகி நின்றாள்

அமரர். சிவஸ்ரீ கி. சுப்பிரமணியக் குருக்கள்

"சொல்லும் பொருளுமென நடமாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசும்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே."

இம் மண்ணுலகில் மானிடச் சட்டை தாங்கி வந்திருக்கும் நாம் அச்சட்டையை உதறி மெய்யான நெறி சென்று அணைய நம் முன்னே காணப்படும் நன்னெறிகள் நான்கு. அவை, தர்ம, அர்த்த, காம, மோஷ என்று பகுக்கப்படும். அறம் பொருள், இன்பம், வீடு என்பனவாகும். ஆனால் இவைகளை வரிசைப்படுத்தும் பொழுது நமது எண்ணத் துலையில் முதலில் அமர்வது இன்பமே.

இன்பம் விழையாத மனிதன் உலகத்தில் இல்லை. எப்பாடுபட்டேனும் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்று துடிக்கின்றான். அத்தகைய இன்பவிழைவும் முக்கூறுபடும். அவை இம்மை இன்பம், மறுமை இன்பம், இம்மை மறுமையாகிய இரு இன்பங்களும். இன்பத்திற்கு அடிப்படை பொருள், பொருளின்றி இன்பம் விளையாது. பொருள் துணைக்காரணம்.

"அருளில்லார்க் கவ்வுலகமில்லை
பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு."

"அருளென்னு மன்பீன் குழவி
பொருளென்னும்
செல்வச் செவிலியா லுண்டு"

இதுபோன்று இம்மை மறுமை இன்பங்களை விளைக்கும் பொருளையும் அறவழியிலேயே தேட வேண்டும். அறவழியல்லாதமற வழியில் ஈட்டிய பொருள் இன்பம் விளைப்பதற்கு பதில் துன்பத்தையே விளைக்கும். சான்றாக தர்ப்பைப் புல்லை அடியிலிருந்து நுனி நோக்கி நீவினால் ஊறு செய்யாது. அப்படியல்லாது நுனியிலிருந்து நீவினால் கைக்கு ஊறு விளைக்கும். ஆற்று வழிச்செல்லும் நாவாய் போல, அறத்தின் போக்கில் சென்றால் இன்பம். மறு தலையானால் துன்பம். "சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தல்" என்னும் நீதிப்படி நமது முன்னோர் அறத்தினை முதன்மையாக்கி பின்பே அதன் பயன்களாகிய பொருள், இன்பம் என்று அமைத்தனர்.

இறைவன் உயிர்களிடத்து நீங்காத பேரன்பு கொண்டவன். ஆகையினாலேயே "சுகத்தைச் செய்பபவன்" என்ற பொருள் தொனிக்கும் "சங்கரன் என்ற பெயரும் கொண்டனன். இறைவன் தனித்து நிற்காமல் தனது பேரருட்சக்தியுடன் இணைந்தே இருக்கின்றான். சக்தியும் இறைவனுக்குத் தாயாயும், மனையாயும், மகளாயும், சகோதரியாயும் விளங்குகின்றாள். இதனைத் திருவாசகம்,

"மின்னிடைச் செந்துவர்வாய்க் கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மொழியீர்
என்னுடைய ஆரமுது எங்களப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைய கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே."

சிவமும், நாதமும் ஆகிய சிவபேதங்களினின்றும் முறையே சக்தியும், விந்துவுமாகிய சக்தி பேதங்கள் தோன்றுதல் பற்றி தந்தை, மகள் முறையாகவும், சக்தியினின்றும் நாதமாகிய சிவபேதம் தோன்றுவதால் தாய், மகன் முறையாகவும், சக்திபேதமாகிய விந்துவினின்றும், சிவபேதமாகிய சதாசிவன் முன்னும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திபேதமாகிய மனோன்மணி பின்னும் தோன்றலால் தமையன், தங்கை முறையாகவும், சிவமும் சக்தியும், சதாசிவன், மனோன்மணி முதலிய சிவசக்தி பேதங்களாய்க் காணப்படுதலின் கணவன் மனைவி முறையாகி யாதுமாகி நிற்கின்றாள் அன்னை. மேலும்மேற்கூறிய கருத்துக்களை,

"பூத்தவளே புவனம் பதினான் கையும் பூத்தவண்ணம் காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு மூத்தவளே..." என்றும், "தவளே இவள்எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம் அவளே அவர்தமக் கன்னையு மாயினள்" என்றும் கூறும் அபிராமிப்பட்டரின் நன்மொழியாலும்,

**"வாயும் மனமும் கடந்த மனோன்மணி**
**பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை**
**ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்**
**தாயும், மகளும், நல் தாரமும் ஆமே"**

என்ற திருமூலரின் பொன் மொழியாலும் தெளியலாம்.

இப்படி அன்னையாய், மகளாய், மனைவியாய், நல் சகோதரியாய்த் திகழும் பராசக்தி தோற்றத்தில் மட்டுமல்ல தொழிலிலும் கூட பல்வேறு வகையில் செயல்படுகின்றாள்.

தனத்தைக் கொடுக்கக்கூடிய மஹாலக்ஷ்மியாகவும், கல்வியைக் கொடுக்கக்கூடிய கலைமகளாகவும், வீரத்தை நல்கக்கூடிய மலைமகளாகவும், மோஷத்தைக் கொடுக்கக் கூடிய மஹாதிரிபுர சுந்தரியாகவும் விளங்குகின்றாள்.

அன்னையினுடைய சரணார விந்தங்கள்தான் நமது அடைக்கலப் பொருள். அவளுடைய அருட்பார்வைதான் ஆன்ம நிவர்த்திக்கு மூலகாரணம். பிறப்பு இறப்பு இல்லாத பரதேவதைதான் நமக்கு அந்தப் பிறவாத பேரின்பத்தை அருளவல்லவள்.

மூககவி கூறுவார், "தாயே உன்னுடைய கடாஷம் சிவனிடம் மோகத்தை உண்டு பண்ணுகின்றது. மனிதர்களுடைய மோகத்தை அடக்கி விடுகின்றது" என்கின்றார். ஞானந்தால் உருவாகிய நாயகனை மோகிக்கப் பண்ணுகின்ற சிவகாம சுந்தரி, காமத்திலேயே உழல்கின்ற மனிதனிடம் அதனை மறக்கச் செய்கிறாள். என்னே அவளது கருணை!

ஆசையின் மூலவேர் என்ன? நம்மைத் தவிர மற்றொன்று இருக்கின்றது என்ற எண்ணம்தான். எல்லாம் ஒன்று என்ற அத்வைத ஞானம் உதயமானால் காமம் இல்லை. மோகம் இல்லை. கோபம் இல்லை. ஆகையினால் ஜனனமே இல்லை. அன்னையுடன் இரண்டறக் கலந்துவிட்டால், கரைந்துவிட்டால் அந்தப் பேரின்பம் கிடைத்துவிடும்.

**"பவாநி த்வம் தாஸே மயி**
**விதர த்ருஷ்டிம் ஸகருணா**
**மிதி ஸ்தோதும் வாஞ்சந்**
**கதயதி பவாநி த்வமிதிய!**
**ததைவ த்வம் தஸ்மை**
**திஸஸி நிஜஸாயுஜ்ய பதவீம்**
**முகுந்தப்ரஹ் மேந்த்ர**
**ஸ்புடமுகுட நீராஜிதபதாம்!"**

இப்படி அன்னையிலேயே கரைந்து விடுவதனால் பவாநித்வம் "நீயாகவே நான் ஆகிவிடுவதால் இரண்டற்ற ஒரே நிலை ஏற்பட்டு பிறப்பற்றுவிடுகிறது என்கின்றார் ஆதிசங்கரர்.

"மனோரூபேக்ஷு கோதண்டா பஞ்ச தந்மாத்ரஸாயகா"

விருப்பு, வெறுப்புக்களைச் செய்யும் நம் மனத்தையே கரும்பு வில்லாக்கி, பஞ்சேந்திரியங்களை அம்பாக்கி தன் கைக்குள்ளே வைத்துக் கொண்டிருக்கின்றாள் அன்னை லலிதா தேவி. சகல விஷயங் களிலும் உள்ள நம் மன விகாரங்கள் ஒடுக்கப்பட வேண்டும். எல்லாவற்றையும் ஒத்து நோக்குகின்ற மன ஒருமைப்பாடு, ஆத்மஞானம்-சமதிருஷ்டி செயற்பட வேண்டும் என்பதே அதன் பொருள்.

அத்தகைய அழியா மோன நிலையை முக்தி நிலையை அருளவேண்டி ஆழித்தேர் ஊர்ந்து வரும் அன்னையின் பாதமலர் பணிவோம்! வினை நீங்கி வீடு பெறுவோம்!!

**"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"**
**சுபம்!**

நன்றி மாத்தளை,ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் சித்திரத் தேர்மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தத்துவம் - ஒருபருந்துப்பார்வை

வை.கா. சிவப்பிரகாசம் எம்.ஏ(கல்வி), எம்.ஏ(தமிழ்)
வருகை கல்வியியலாளர், கல்வித்துறை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## 1.0 அறிமுகம்

சமயம் என்றால் என்ன? அதன் பரிமாணங்கள் யாவை? இவை நாம் தெளிவான விளக்கம் பெற விரும்பும் வினாக்கள் ஆகும். முதலிலே சமயம் என்றால் என்ன என்னும் வினாவுக்கு மேலை நாட்டு அறிஞர்கள் இருவர் கூறிய வரைவிலக்கணத்தை அறிந்து கொள்ளுவோம்.

"சமயம் என்பது மனிதநிலையைக் கடந்த வர்க்கத்தின் மீதுள்ள நம்பிக்கை" என ஈ.பி. டெயிலர் (E.B. TAYLOR) என்னும் அறிஞர் ஒரு வரையறையைத் தந்துள்ளார்.

"சமயம் என்பது உயிர்வாழ்வின் முழுமையை உள்ளடக்கியுள்ள ஒருதுறை". இது கொம்ப்டே (COMPTE) என்பவர் வகுத்த வரைவிலக்கணம் ஆகும்.

அடுத்து சமயம் பற்றி இந்தியச்சிந்தனை ஒன்றைப் பார்ப்போம். "மனித இனத்தின் எல்லாச் செயற்பாடுகளுக்கும் உரிய அறம்சார்ந்த அடிப்படையே சமயம்"- மகாத்மா காந்தி. இவ்வரைவிலக்கணங்கள் "பண்பாடு" என்பது போல சமயம் என்பது கருத்து வேறுபாடுகளுக்கு இடம் அளிக்கும் ஒரு சிந்தனை என்ற உண்மையை நமக்கு உணர்த்துகின்றன.

## 2.0 சமயம்

சமயம் என்பது வெறுமனே ஏற்கப்பட வேண்டிய கொள்கை அல்ல. அது யாவரும் அனுசரிக்க வேண்டிய வாழ்க்கை நெறி என்னும் முடிவான கருத்தை அழுத்தமாக தெரிவிக்கின்றன.

சமயம் என்னும் துறையின் பரிமாணங்கள் யாவை என்பதை பின்வருமாறு நிரல் படுத்தலாம்.

சமயம் என்பது:

சமூகத்தில் தொழிற்படுவது
சமூகத்தால் வளர்க்கப்படுவது
சமூகத்தை வளர்க்க வேண்டியது
சமூகங்களின் கூட்டு ஆகிய
நாடு என்ற அமைப்பில் வளர்வது
நாட்டின் பொதுநலன்களைப்
பேணவேண்டியது.

எனவே சமூகமும் நாடும் செய்யத்தக்கன அல்லது செய்ய வேண்டியவை என எதிர்பார்ப்பவற்றை நிறைவேற்றுதலும், செய்யத்தகாதவை அல்லது தவிர்க்க வேண்டியவை எனத் தீர்மானிக்கின்றவற்றை விலக்கிவிடுதலும் சமய நெறியின் நடைமுறையிலே கட்டியெழுப்பப்பட வேண்டும், பேணிக்காக்கப்பட வேண்டும்.

சயமயத்தின் கருப்பொருள் அல்லது உயிர்நாடி "தெய்வீக அநுபவம்" ஆகும். இந்த அநுபவத்தைத் பக்குவநிலை அடைந்த உயிர்ப்பொருள் பெற்றுக்கொள்வதற்கு உரிய வழிகள் மூன்று என்பது ஒருவகைக் கொள்கை. அவை பக்தி மார்க்கம், கருமமார்க்கம், ஞானமார்க்கம் என இந்தியச் சிந்தனையாளர்களில் ஒருபிரிவினர் முதன்மைப்படுத்திக் கூறுகின்றனர். மற்றொரு சிந்தனை மரபினர் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்கள் இறையநுபவத்தை அடைவதற்குரிய வழிகள் என்பர்.

இக்கருத்துக்களை இன்னுமொருவிதத்தில் தொகுத்துக் கூறுவதானால், அவரவர்க்குப் பொருத்தமான வழிகளை வகுத்தல், உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் தெய்வீக அனுபவம் பெற வாய்ப்பு வழங்கல் என்பன சமயத்தின் சிறப்பு முக்கியத்துவம் உள்ள பரிணாமங்கள் ஆகும்.

## 3.0 இந்து சமயம்

"இந்து சமயம் என்பது ஒரு தனிச்சமயம் அன்று, அது தனிநபரின் சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம் என்பவற்றைப் பேணும் ஓர் ஒழுங்கமைப்பு ஆகும்" என்று இந்திய அறிஞர்-லாலா லஜபதிராய் - (LALA LAJPAT RAI) வரைந்த இக்கூற்று ஆழமான சிந்தனைக்கு உரியது. ஒரு தனிநபர் பரம்பொருளை எந்தப் பெயர் அல்லது எந்த நாமம் சூட்டி, எந்த முறையை அல்லது வழிபாட்டு மார்க்கத்தைப் பின்பற்றி வாழவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளும் ஓர் ஒழுங்கமைப்பே இந்துசமயம் என்ற பொருள் செறிந்த, விரிகூற்று மூலம் லாலா லஜபதி ராய் தமது கருத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

ஒரு மக்கள் தொகுதியினர் பரம் பொருளைச் "சிவன்" என்னும் நாமம் சூட்டி வழிபடும் நெறி..அமைப்பு "சைவம்" எனப்படும். அவ்வாறே பிற தொகுதியினர் பரம்பொருளை விஷ்ணு, சக்தி, கணபதி, குமரன், சூரியன் என்னும் வெவ்வெறு நாமங்கள் சூட்டி வழிபட்டால் அந்த நெறிகள்..அமைப்புக்கள் முறையே வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் எனப்படும். சைவம் என்னும் நெறியை அநுசரிப்பவர்கள் பரம்பொருளை லிங்கம் என்ற வடிவிலோ வைரவர் என்ற வடிவிலோ வழிப்பட்டால் அவர்கள் லிங்காயதர் அல்லது லிங்கதாரிகள் அல்லது லிங்கக்கட்டிகள் என்றோ பைரவ நெறியினர் அல்லது வைரவமார்க்கத்தினர் என்றோ வித்தியாசமான முறையிற் குறிப்பிடப்படுவர். அங்ஙனமே, வைணவ நெறியை அநுசரிப்பவர்களிற் சமய நூற்பிரமாணம், சமயச் சின்னம் தரிக்கும் முறை என்பவற்றிலே வேறுபடுபவர்கள் தென்கலை வைணவர், வடகலை வைணவர்கள் எனப்படுவர்.

லாலா லஜபதி ராய் சிறப்பித்து கூறும் வழிபாட்டுச் சுதந்திரம் என்னும் சிந்தனைக் கூறு சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்களிலே தமக்குப் பொருத்தமான ஒன்றைத் தெரிவு செய்யும் உரிமையை சைவநெறி ஏற்றுக்கொள்கிறது. அது போல, பக்திமார்க்கம், கருமமார்க்கம், ஞானமார்க்கம் ஆகிய வழிகளில் உசிதமான ஒன்றை தெரிவு செய்யும் சுதந்திரத்தை வைணவம் ஏற்றுக் கொள்கிறது. மேலும் இஷ்ட தெய்வ வழிபாடு, சந்தியாவந்தனம், நாத உபாசனை, கூட்டுப்பிரார்த்தனை, குலதெய்வ வழிபாடு, தனியாள்சார், குடும்பசார் உரிமைகளையும் இந்து சமயம் ஆகிய ஒழுங்கமைப்பு அங்கீகரிக்கின்றது.

1. உ-ம்: திருநாவுக்கரசர் கவித்திறன், பல்சமயப்புலமை, கவியோகி என்னும் பாராட்டு ஆகிய யாவும் ஒருங்கே அமைந்த சமயக்குரவர். அவர் நாற்பாதங்களில் சரியை மார்க்கத்தை தொண்டுவழியைத் தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றிருந்தார்.
2. துறைமங்கலம் சிவப்பிரகாசர் ஒரு வீரசைவர், லிங்கதாசி ஆயினும் முருகன்மீது நிரோட்டகயமக அந்தாதி பாடும் தனிநபர் சுதந்திரத்தை நிலைநாட்டி உள்ளார்.
3. பெரியாழ்வார் திருத்துழாய் மாலைத்தொண்டு புரிதலை வழிபாட்டு நெறியாகத் தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றிருந்தார்.
4. ஆண்டாள் தாம் சூடிக் கொடுக்கும் துளசிமாலையைத் திருமாலுகக்குச் சாத்தும் தனிநபர் சுதந்திரத்தைப் பரம்பொருள் மூலமே பெற்றிருந்தார். முதற்காலத்திலே அடிப்படை மனித உரிமைகள் பற்றிய சிந்தனைகள் தீவிரம் அடையாத சந்தர்ப்பங்களிற் பேணப்பட்ட தனி மனித உரிமைகள் இருபத்தோராம் நூற்றாண்டில் வாழும் நமக்கு ஏற்றன ஆகும். முக்கியமாக அவை கூட்டுப் பிரார்த்தனை, குலதெய்வ வழிபாடு, நாத உபாசனை என்பவற்றின் வளர்ச்சிக்குத் துணை புரிகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.0 இந்து தத்துவம்

சமயம், இந்துசமயம் என்பன பற்றிய பரிசீலனையில் (1) வாழும் மனிதர்கள் (உயிர்ப்பொருள்) (2) அவர்களின் உயிர்வாழ்வு (3) வாழ்வின் முழுமை என்பன தொடர்பான சிந்தனைச்சிதறல்களை அறிந்து கொண்டோம். இனி, தத்துவம் அல்லது மெய்யுணவியல் (PHILOSOPHY) என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முயல்வோம்.

தத்துவம் என்பது வாழ்வின் தன்மை, மெய்ப்பொருள் என்பன தொடர்பான அறிவுத்தேடலின் மூலம் பெறப்படும் முடிவுகள் அடங்கிய சிந்தனை அமைப்பு அல்லது கருத்து ஒழுங்கமைப்பு ஆகும். எனவே இந்த விளக்கத்திற்கு இணங்கத் தத்துவம் என்னும் துறையை மெய்யுணர்வியல், மெய்யியல் என்று கூறுதல் பொருத்தமே ஆகும். இதனை இந்து நோக்கில் வரையறை செய்வதானால் மேலே கூறிய சமயம் சார் உள்ளடக்கக் கூறுகள் மூன்றும் தொடர்பாகக் காலம் காலமாக "ஞானிகள்" தமது புலக்காட்சி, குருவின் உபதேசம், அசாதாரண அநுபவம் அல்லது அநுபூதி ஆகியன மூலம் திரட்டிய ஆழமான சிந்தனைகளின் தொகுப்பு அல்லது அமைப்பே தத்துவம் எனலாம்.

## 5.0 இந்துதத்துவப் பிரிவுகள்

இந்துசமயம் என்னும் ஒழுங்கமைப்பில் அறுவகைச்சமய நெறிகளும் அவற்றின் கிளைநெறிகளும் இருப்பது போல இந்துதத்துவத் தொகுதியிலும் பல பிரிவுகள் காணப்படுகின்றன. உதாரணமாக, சைவம் என்னும் சமயநெறியில் அடங்கும் சித்தாந்த சைவம், வீரசைவம், காசுமீர சைவம் என்னும் கிளைநெறிகளின் தத்துவக் கோட்பாடுகளாக முறையே சுத்தசைவ தரிசனம் அல்லது சைவசித்தாந்தம், சடுதலசித்தாந்தம் அல்லது சக்தி விசிட்டாத்துவைதம், பிரத்யபிஞ்ஞான தரிசனம் என்ற மூன்று சிந்தனை மரபுகள் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. அவ்வாறே பிரம்ம சூத்திரவிளக்கங்களின் அடிப்படையில் உருவான இந்து தத்துவப் பிரிவுகளாக அத்துவைதம் (சங்கர வேதாந்தம்), விசிட்டாத்துவைதம் (இராமாநுஜ வேதாந்தம்), துவைதம் (மத்துவ வேதாந்தம்) என்னும் மூன்றும் சிறப்புவகைகளாகக் குறிப்பிடப்படுகின்றன. சைவவிளக்கம் சார்பான தத்துவப்பிரிவுகள் ஆகமாந்தம் அல்லது சைவசித்தாந்தம் என்ற தொகுதியிலும் பிரம்மசூத்திர விளக்கம் சார்பான தத்துவப் பிரிவுகள் வேதாந்தம் அல்லது நிகமாந்தம் என்ற தொகுதியிலும் அடங்கும்.

## 6.0 தத்துவச்சிந்தனைகள்

கீழைத்தேய மக்களின் தத்துவச் சிந்தனை முறைகளுக்கும் மேலைத்தேய மக்களின் தத்துவச் சிந்தனை முறைகளுக்கும் இடையே ஒரு முக்கிய வேறுபாடு காணப்படுகிறது. அவ்வேறுபாடு பற்றி ஜப்பானிய அறிஞர் ஹஜிமே நகமுரா (HAJIME NAKAMURA) பின்வருமாறு கூறியுள்ளார். "கீழைத்தேய மக்களில் ஜப்பானியரும் இந்தியரும் தத்துவத் துறையிலே உள்ளுணர்வு வழி சிந்தனையில் ஈடுபாடு கொள்ள மேலைத்தேய மக்கள் அத்துறையிலே அளவையியல்வழி சிந்தனை முறைமையிலே கவனத்தைச் செலுத்தியுள்ளனர்" **(WAYS OF THINKING OF EASTERN PEOPLES HAJIME NAKAMURA)**

ஹஜிமே நகமுரா கூறிய கருத்து இந்துதத்துவ வாதிகளின் கருத்து வேறுபாடுகளுக்குரிய காரணங்களில் ஒன்றைச் சுட்டுவதாகக் கூறலாம். சமயவாதிகள் காலந்தோறும் கருத்து வேறுபாடுகளை அழுத்தமாகக் கூறிய போதும் அதாவது கண்டனங்களை எடுத்துக் கூறிய போதும் இந்து தத்துவச்சிந்தனை மரபுகளில் "உயிர்ச்சத்துக்கள்" காணப்பட்டமையால் அத்தத்துவப் பிரிவுகள் "தப்பிப் பிழைத்து" வாழ்கின்றன. அவை இருபத்தோராம் நூற்றாண்டிலும் கூட முழுமையுள்ள ஒழுங்கமைப்பாக வாழ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.0 இந்துதத்துவப் பிரிவுகளின் பொதுக் கூறுகள்

வரலாற்றுக் காலம் தொடக்கம் கிரியைகள், வைபவ நடைமுறைகள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், ஏனைய புறச்செயற்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் சமயங்களிடையே பண்முக வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த உண்மை இந்துசமயதத்துவச் சிந்தனை மரபுகளுக்கும் பொருந்தும். ஆயினும் அவற்றுக்கு இடையிலே குறிப்பிடத்தக்க பொதுக் கூறுகள் பல உள்ளன. பின்வருவன அப்பொதுக் கூறுகளில் முக்கியமானவை ஆகும்.

(அ) உயிர்ப்பொருள் (மனிதஉயிர்), உலகம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்ட "ஏதோ ஒரு பொருள்" பற்றிய விளக்கம் அளித்தல் இந்து தத்துவப் பிரிவுகளின் குறிக்கோள் ஆகும். அதாவது அவை தனிநபரின் இட்டதெய்வமாகவோ பெருந்தொகை மக்களின் வழிபாட்டுக்குரிய பூரணபரம் பொருளாகவோ கருதப்படுகின்ற, இயற்கை கடந்த உள்பொருள் பற்றிய தெளிவான விளக்கத்தைத் தர முயல்கின்றன.

(ஆ) அவை உயிர்ப் பொருளான மனிதர்கள் (1) அந்த உள்பொருளுடன் இணைதல் அல்லது ஒன்றுதல்

(2) தமது வாழ்வின் மேம்பட்ட குறிக்கோளை அடைதல் என்பவற்றை நிறைவேற்று வதற்குரிய வழியைக் காட்டுகின்றன.

(இ) உயிர்ப்பொருளான மனிதர்கள் தமது மனத்தின் மூலம் அல்லது நியாய வாதத்தின் மூலம் சமயத்தின் மெய்ப்பொருளை அல்லது புதிரான அநுபவத்தை அல்லது தருமத்தின் உண்மையான பொருளை அறிந்து கொள்ளமுடியாது. மாறாக அம்மெய்ப்பொருள் பற்றிய விளக்கத்தை முனிவர்கள், தீர்க்கதரிசிகள், போன்றவர்கள் மூலமோ பரம்பொருள் மூலமோ இயற்கைநிலை கடந்த அநுபவம் மூலமோ உயிர்ப்பொருள் பெற்றுக்கொள்ளமுடியும்.

(ஈ) ஞானம் அளிக்கும் சமயப்பிரமாண நூல்களில் விதிக்கப்பட்ட கட்டளைகள் (நியமங்கள்), தடைகள் (இயமங்கள்) என்பவற்றை பணிவோடு ஏற்றுக்கொண்டு வாழ்வில் பின்பற்றும் தொழிற்பாட்டிலேதான் தனிநபரின் நலமும் சமூகத்தின் நலமும் தங்கியுள்ளன.

(உ) அவை மக்கள் தனியாகவும் கூட்டாகவும் வளர்க்க வேண்டிய ஒழுக்கம் சார்பான, ஆன்மீகம் சார்பான, உயர்கணிப்புள்ள விழுமியங்களை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன.

## 8.0 முடிவுரை

சமயவாதிகளின் கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்து பொதுக் கூறுகளை ஆதரித்து இணக்கம் காணும் முயற்சிக்கு முதிர் வயதுப்பருவத்தில் ஏற்படும் அநுபவ ஞானமே உதவ முடியும். ஒருமுறை கொன்பூசியஸ் சொன்னார். "நான் 60 வயதில் கண்டனவாதியாக இருக்கவே இல்லை; 70 வயதில் வழக்கத்தை மீறாமல் என் இதயத்தின் விருப்பத்தை நிறைவேற்றும் வழியில் என்னால் செல்ல முடிந்தது".

கொன்பூசியஸ் கூறிய அநுபவஞானச் சிந்தனையை 70 வயது கடந்த, அநுபவஞானம் முதிர்ந்த கவியோகி நாவுக்கரசர் அழுத்தமாக இசைத்த பாடற் பகுதியுடன் இச்சிந்தனை உரையை நிறைவு செய்வோம்.

"ஏதுக்களாலும் எடுத்த மொழி
யாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள
னெங்கள்சோதி
மாதுக் கநீங் கலுறுவீர் இறையேவந்
துசார்மின்களே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் விழாவைக் கொண்டாடும் மாத்தளை சைவ மகா சபை
இன்னும் பல தசாப்த காலங்கள்
தமிழுக்கும் சைவத்துக்கும் சேவை செய்ய வாழ்த்துகின்றோம்...

# நிரோஷா ஐஸ் கம்பனி

**இல: 25A, போமளுவ றோட்,**
**மாத்தளை.**

தொலை பேசி: 066- 2231418



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை வாழ் தமிழ் மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்ற
சைவ மகா சபை வாழ்க!

SOMAS
LIME WORKS

ALUWIHARA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மதம் மாறுவது கடவுள் படைப்புக்கு மாறானது

கு. புண்ணியமூர்த்தி
சமாதான நீதிவான் (அகில இலங்கை) கணக்குப்பரிசோதகர்,
மாத்தளை சைவ மகா சபை (ஓய்வு பெற்ற கணக்காய்வு அதிகாரி)

இந்து மதம் உலகச் சமயங்கள் அனைத்துக்கும் முதன்மையானது. இந்து மதத்தைக் தவிர்ந்த ஏனைய சமயங்கள் யாவும் தோன்றிய காலங்களும் தோற்றுவித்தவர்கள் பற்றிய விபரங்களும் எல்லோராலும் அறியக் கூடியதாக இருக்கின்றன. ஆனால் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், மனித குலத்தைப் படைத்த அன்றே அவர்கள் மேல் கருணை கொண்டு இந்து சமயத்தையும் உண்டாக்கினார் என்றே கொள்ள வேண்டும். இந்து சமயம் உலகத்திலே மிகச் சிறந்த சமயம். இந்து சமயம் மிகவும் உன்னதமானதும் சுதந்திரமானதுமாகும். அமெரிக்க சிக்காகோ நகரில் நடந்த சர்வ மதம் சம்பந்தமான மகாநாட்டில் சுவாமி விவேகானந்தர், இந்து மதத்தின் தத்துவங்களையும் அருமை பெருமைகளை எல்லாம் எடுத்துக் கூறி இந்து சமயம் தான் உலகில் சிறந்த சமயம் என ஆதார பூர்வமாக நிருபித்தார். அதன் மூலம் சுவாமி விவேகானந்தரின் பெயர் உலகப் புகழ் பெற்றது.

முற்பிறவிகளில் நீங்கள் செய்த நற்கருமங்கள் காரணமாகத்தான் கடவுள் உங்களை இந்துமதப் பெற்றோர்களுக்குப் பிள்ளைகளாகப் பிறக்கச் செய்தார். கடவுளே, கடவுளே என எல்லாவற்றுக்கும் கடவுளையே நம்பிக் கூப்பிடும், வணங்கும் ஒருவர் ஏன் கடவுளின் செயலுக்கு மாறாக வேறு சமயங்களின் நம்பிக்கை கொள்ளவேண்டும். ஏன் ஏமாளிகளாகச் சமயத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். மலை உச்சியிலிருந்து பாயும் தண்ணீர் எந்தப்பாதையில் போனாலும் கடைசியாகக் கடலைத்தான் சென்று அடைகின்றது. அதுபோல் யார் எப்படிக் கும்பிட்டாலும் இறைவன் ஒருவனையே கும்பிடுகின்றோம் என்பார்கள். அது தவறான கருத்தாகும். மலை உச்சியிலிருந்து பாயும் தண்ணீர் எல்லாம் கடலைத்தான் சென்று அடைகின்றன என்று திடமாக எப்படிக் கூறமுடியும். முற்றிலும் சுற்றி அணைகட்டப்பட்ட வாவி, குளம், ஏரிகளில் விழும் ஆற்றுத் தண்ணீர் அவற்றில் தேங்கி நிற்கின்றன. அதுபோல இந்து சமயத்திலிருந்து வேறு சமயங்களுக்குப் போனவர்கள் போபவர்கள் என்றும் நரகத்தைச் சென்றடைவார்கள். அவர்களுக்கு எந்நாளும் மோட்ஷம் போகும் வழி மறைக்கப்பட்டே இருக்கும். குளத்தில் விழுந்த நீர் ஒருபோதும் கடலில் சங்கமமாகாது. அது போல இந்து மதத்திலிருந்து வேறு சமயங்களுக்குப் போனவர்களுக்கும் தேங்கி நிற்கும் குளத்து நீரின் கதியேயாகும்.

மதம் மாற்றி ஒருவர் ஒரு பெரும் கூட்டத்தில் பேசுகின்றார். உங்கள் நோய்களைத் தீர்க்கின்றேன், பிணிகளைத், தீர்க்கின்றேன். என்னிடத்தில் வாருங்கள் எங்கள் கடவுள்மேல் முழு நம்பிக்கை வையுங்கள் என்கிறார். யாரோ ஒருவர் கூட்டத்தின் பின்பக்கத்திலிருந்து மேடையை நோக்கி வருகிறார். மிகவும் கஷ்டப்பட்டு நொண்டி நொண்டி வந்தவர் கூட்டத்தில் பேசியவர் முன் போகிறார். பேசியவர் அவரின் தலையில் கையை வைத்து ஏதோ கூறுகிறார். நொண்டி நொண்டி வந்தவர் நான் இந்துவாக இருந்தேன் நொண்டியாவே இருந்தேன் இப்போழுது எனது கால்கள் சுகமாகிவிட்டன. ஆனபடியால் இன்று தொடக்கம் நான் பிரசங்கியாரின் சமயத்திற்கு மாறுகிறேன். அவரின் கடவுளை விசுவாசிக்கிறேன் எனக் கூறிக் கொண்டு நடந்து வந்தவர் ஓடிப்போகின்றார். அப்படியே ஒரு குருடன் இரண்டு கண்களும் தெரியாது என்று வருகிறான். அவனுக்கும் கண்கள் நன்றாகத் தெரிவதாகக் கூறி அவன் அச்சமயத்தில் சேர்வதாகக் கூறுகின்றான். எனது காலில் எக்சிமா சொறி நானும் காலைச் செலவு இன்றிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகமாக்கிக் கொள்ளலாம், பிரசங்கியார் தொட்டவுடன் சுகமாகுதே என்று நினைத்து அவர் முன்னே போனேன். எல்லோருக்கும் போல கையை உயர்த்தி ஏதோ சொல்லுகின்றார், எனது காலில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. பிரசங்கியார் சொல்லுகிறார், "எங்கள் கடவுள் இடத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை, அதுதான் சுகம் வரவில்லை. எங்கள் கடவுளை நம்புங்கள், எங்கள் சமயத்திற்கு வாருங்கள், உங்கள் கால் வருத்தம் சுகமாகி விடும்" என்கிறார்.

அறிவு மிக்க இந்துக்களே, உன்னதமான இந்து மதத்தில் பிறந்தவர்களே சிந்தித்துப் பாருங்கள் சித்து வேலைகள் செய்து ஏமாற்றி மதம் மாற்றும் அவர்களின் சமயத்தில் உள்ளவர்கள் எல்லோரும் எதுவித வருத்தமோ குறைகளோ இல்லாதவர்களாகவா இருக்கின்றார்கள். முதலில் அவர்கள் சமயத்தில் உள்ள வர்களை வருத்தமும் குறைபாடுகளும் இல்லாதவர்களாக ஆக்கட்டும்.

நாங்கள் காணி தருகிறோம், வீடு கட்டித்தருகின்றோம், உயர் கல்வி வசதி செய்து தருகின்றோம், தொழில் செய்ய பண உதவி செய்கிறோம், மேல் நிலைக்குக் கொண்டு வருகிறோம் என்கிறார்கள். ஆசை வார்த்தை சொல்லி மதத்தை மாற்றப் பார்க்கிறார்கள். சமயத்தை மாற்றித் தங்கள் சமயத்தில் சேரும்படி கேட்பவர்களின் சமூகத்தில் வசதியற்றவர்கள், ஏழைகள் இல்லையா. அவர்கள் எல்லோரும் குபேரர்களாகவா இருக்கிறார்கள். ஆசை வார்த்தைகளை நம்பி மதம் மாறியவர்கள் எல்லோருமே மதம் மாறியவர்கள், சமூகத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள் என்ற அவப்பெயருடன் இரப்பவர்களாகவே இருக்கின்றார்கள்.

இந்து மதத்தவர்களே நன்றாகச் சிந்தியுங்கள். தினமும் பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன பஸ்ஸிலோ றெயினிலோ ஆசையாகப் பேசி சிநேகமாகி ஏதோ ஒன்றைச் சாப்பிடக் கொடுத்தோ குடிக்கக்கொடுத்தோ மயக்கியபின் உடமைகள் எல்லாவற்றையும் அபகரித்துச் செல்வதாக, அக்கள்வர்களைப் போல்தான் சமயத்தை மாற்றும்படி சொல்பவர்களும், அவர்கள் எங்கள் சமயத்தை எங்களிடமிருந்து பலாத்காரமாகப் பிடுங்கி எடுக்கிறார்கள்.அவர்கள் சொர்க்கத்தை, மோட்சத்தைக் காட்டுவதாகக் கூறுகிறார்கள். அவர்கள் அவற்றைக் கண்டார்களா, அல்லது கண்டவர்களைக் கண்டார்களா.

